10

॥ श्रीः ॥



॥ गुरुचरित्रविमर्शः ॥

குருசரிதை விமரிசை

By

KESAVACHAR KATTI, B. A.
Chief Officer, Bhagalkotta,
BOMBAY STATE.

Tamil Translation by :

B. V. RENGANATHACHARIAR
Editor "Madhva Mitran"
KUMBAKONAM.

Printed at the
Sri Vidya Power Press
Kumbakonam.

1952

Q2
N52
176144

॥ श्रीः ॥

முன்னுரை.

मुकुंदभक्त्यै गुरुभक्ति जायै என்று ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் சொன்னபடி மோக்ஷத்தைத் தருபவரான பகவானிடம் பக்தி ஏற்பட, தன் உத்தமர்களான குருமார்களிடம் உசிதமான சுத்த பக்தி இருத்தல் அவசியம். முன்னோர்களான குருமார்களிடம் அத்தகைய சுத்த பக்தி அவர்களின் உண்மையான ஸத் சரித்திரத்தைக் கேட்டுத்தான் ஏற்பட வேண்டும். குரு பக்தியில் சுத்தமானது என்றால், அதில் எவ்வகை குருத்வேஷமும் கலக்காமலிருப்பது ஆகும். அப்படியிருக்க தன்னைவிட உத்தமர்களை அவர்கள் ஒருவனுடைய மடத்து ஸ்வாமிகளாய் இல்லை என்பதைக்கொண்டு, அவர்களிடம் இருந்துவந்த ஸத் குணகணங்களை எல்லாம் அபலாபம் செய்து, அவர்களிடம் இல்லாத பொல்லாத தோஷங்களை எல்லாம் கற்பித்து, மிக்க இழிவாய் பொது ஜனங்கள் எண்ணும்படி, ஆதாரமற்ற உண்மை கலப்பில்லாத அவர்களின் சரித்திரமொன்றை பிரசித்தப்படுத்துவது மிகவும் அநுசிதம். அதிலேயும் இத்தகைய குரு நிந்தா க்ரந்தங்களுக்கு காதுக்கு இனிமையான ஓர் பெயர் கொடுத்து, அதனால் வாசகர்களின் மனதை முதலில் ஆகர்ஷித்து, பின்பு கலக்கமடையச் செய்வது மற்றும் அநுசிதம். அதிலேயும் ஜகத் வந்த்யரான ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகளின் விஷயத்தில், உலகில் எப்பேர்ப்பட்ட ஸாமானியர்களுக்கும் இருந்துவரும் விசேஷ விசுவாசத்தை தவறுதலாய் இத்தகைய காரியத்துக்கு பயன் படுத்திக்கொள்வது முற்றும் அநுசிதமாகும். இப்பால் குரு சரிதை என்னும் ஸாதுவான பெயரைக் கொடுத்து ஸ்ரீமான் H. K. வேதவ்யாஸாசாரியாரால் இயற்றி வெளி

யாக்கப்பட்டிருக்கும் அந்நூலில் எத்தனையோ ஸத்குரு மார்களின் விஷயத்தில் இத்தகைய அநேக அஸத்ய சரிதைகள் நிரூபிக்கப்பட்டிருப்பதால், இது விஷயமாய் பொது ஜனங்களை எச்சரித்து குரு சரிதையில் சொல்லப் பட்டிருப்பது எவ்வளவுதூரம் நிஜம் என்பதைக் காட்டு வதே இந்த குரு சரிதை விமரிசையின் உத்தேசம்.

குரு சரிதையின் ஆராய்ச்சியில், ஸ்ரீ நரஹரி தீர்த்தர் ஸ்ரீ வித்யாநிதி தீர்த்தர், ஸ்ரீ ரகுநந்தன தீர்த்தர், ஸ்ரீ ஸுரேந்திர தீர்த்தர் முதலான ஸத்குரு ஜனங்களிடம் அநேக துஸ்சரித்ரங்கள் தைரியமாய் சொல்லப்பட்டிருக் கின்றன. ஜகத்குருவான ஸ்ரீ வித்யாநிதி தீர்த்தர் துளுவர் என்றும் பரமஹம்ஸ சிரேஷ்டரான ஸ்ரீ ரகு நந்தன தீர்த்கர் கண்வர் என்றும் இந்த ஆராய்ச்சியில் ஏற்பட்டிருக்கின்றனர். இதிஹாஸங்கள் புராணங்கள் முதலான ஆதாரங்களை வைத்துக்கொண்டு, அதன் பேரில் ஓர் பழைய கதையை ஜோடித்துச் சொல்வது ஆச்சரியமன்று. ஓர் வகை ஆதாரமுமில்லாமல் நானூறு வருஷத்திற்கு முன்பு நடந்ததை, வருஷம், நாள், நேரம், இடம், நபர் வாரியாய் வெகு கணககாய் கதைகளை அடுக்கி ஜோடித்திருப்பதுதான் இந்த ஆராய்ச்சியில் மிகமிக ஆச்சரியப்படத்தக்க விஷயம். மற்றொரு ஆச்ச ரியமென்னவெனில், எப்பேர்ப்பட்ட யோகீசுவரர்களுக் கும் அறியப்படமுடியாத விஷயங்கள், அதாவது அந்தந்த ஸ்வாமிகளின் அம்சாம்சிபாவம், அவதார ப்ரயோஜனம், சக புருஷர்களின் ஸ்வரூபம், அவர்களின் சரமதேஹம் (சடைசி ஜன்மா) இதராள் மனதில் உள்ள சுக துக்க த்வேஷாதிகள் முதலானவைகள் சிறிதும் சம்சயமின்றி முன்பின யோசிக்காமல் நிர்ணயம்செய்துகாட்டியிருப்பது.

ஸ்ரீ ராமசந்திர தீர்த்தர் காலமாகும்பொழுது, (அந் நூலாசிரியரின் அபிப்பிராயப்படி) ஓர் துளுவ சன்யாசி ஸ்ரீ வித்யாநிதி தீர்த்தர் என்பவர், அவருக்கு சிஷ்யராய்

இருந்தார் என்பதற்கு எந்த ஆதாரமுமில்லை என்று அந் நூலாசிரியர் சொல்லியுள்ளார். இவ்வாறு சொல்வதை விட்டு, தனக்கு எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை என்று எழுதியிருந்தால் நன்ருய் இருந்திருக்கும். ஒருவர் விவாகம் செய்துகொண்ட அவருடைய பத்னியை, மற்ருெருவரின் பத்னி என்று ஒருவர் சொன்னுல் எப்படியோ, அப்படித் தான் ஓர் மடத்து ஓர் சுவாமிகளின் சிஷ்யரை மற்ருெரு மடத்து மற்ருெரு ஸ்வாமிகளின் சிஷ்யர் என்று சொல்வது. உத்தராதி மடம் ஸ்வாமிகளான ராமசந்திர தீர்த்தரின் சிஷ்யரான வித்யாநிதி தீர்த்தரை உடுபி சீரூர் மடத்து ஸ்வாமிகள் என்று குரு சரிதையில் சொல்லப்பட்டிருப்பது அவ்வாறே ஆகலாம். உண்மையை விசாரிக்குமளவில் ஸ்ரீ பத்மநாப தீர்த்தர் ஸ்ரீ மத்வாசாரியாரின் சிஷ்யர் என்ப தில் எவ்வகை ஆதாரமுண்டோ, ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமி கள் ஸுதீந்திரரின் சிஷ்யர் என்பதில் எந்த ஆதார முண்டோ அத்தகைய ஆதாரம்தான் ஸ்ரீ ராமசந்திர தீர்த்தரின் சிஷயர் ஸ்ரீ வித்யாநிதி தீர்த்தர் என்பதற்கு இருந்துவருகிறது. அந்த நூலாசிரியர் பிரமாணமாகக் கொண்ட ஸ்ரீ ஜகன்நாததாஸரே, குரு பரம்பரையை வர்ணிக்கும் பதத்தில் "வாகீசமுனி—ராமசந்த்ர—வித்யா நிதி—ரகுநாத வர்ய" என்று ஸ்பஷ்டமாக ராமசந்திர தீர்த்தரின் சிஷ்யர் வித்யாநிதி தீர்த்தர் என்பதாய் வர் ணித்திருப்பதை இவர் எப்படி பிரமாணமில்லை என்று மறைக்க முடியும்! ஆனல் குரு சரிதையில் கண்ட ஜோடனையை கவனித்தால் ஏதும் சாத்யமே. சானு போகர்கள் என்னும் 63 ஸேவா ஜனங்கள் ஸ்ரீ ராமசந் திர தீர்த்தரின் காலத்தில் இருந்தார்கள் என்று அறிவிக் கப்பட்டிருக்கிறது. ஸ்ரீ விபுதேந்திர தீர்த்தரின் காலத் தில்தான் முதன் முதலில் ஸ்ரீ கிருஷ்ணதேவ ராயரால் சிக்ககுளி என்னும் கிராமம் மான்யம் கொடுக்கப்பட்ட தென்றும் அந்த நூலிலேயே சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியிருக்க, அதற்கு முன்பு ஸ்ரீ ராமசந்திர தீர்த்த

ரின் காலத்தில் அம் மடத்துக்கு சொத்து எப்படி இருக்கும்? இவ்வளவு ஜனங்களுக்கு சம்பளம் கொடுத்து சாப்பாடு போட்டு வைத்துக்கொள்ள அலுவல்தான் என்ன உண்டு? ஸ்ரீ ராமசந்திர தீர்த்தரின் காலமாகி விபுதேந்திரர் அங்கு வரும்வரை அவர்கள் எங்கிருந்தனர்? 6 மாதம் வரை இவர்கள் ஒன்ருய்கூடி சேர்ந்து இருந்து சும்மா இருந்தனர் என்பது நம்பத்தகாதது. அப்படியே அவர்கள் இருந்திருக்கும் பக்ஷத்தில், அம் மடத்து ஸ்வாமிகளான ஸ்ரீ ராமசந்திர தீர்த்தர், அவர்களிடம் தம் பூஜா விக்ரஹங்களை ஒப்புவிக்காமல் எரகோள கிராமப் பிரமுகர்களிடம் ஒப்புவிப்பானேன்? சானுபோகர்களிடம் குருபக்தி இல்லை என்று அவர் கண்டு கொண்டிருந்தால் அவர்களை வேலையில் ஏன் அமர்த்தி வைத்திருக்கவேண்டும்? இந்த நூலில் கிராம ப்ரமுகர்களையும் சானுபோகர்களையும் சேர்த்து நெடுக பரஸ்பரம் வ்யாஹதமாய் முறண்பட்ட கதைகள் ராமசந்திர தீர்த்தரின் விஷயத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

குரு சரிதையில் காட்டியிருப்பதைப்போல் ஸ்ரீ வித்யாநிதி தீர்த்தர், இந்த அறுபத்திமூவருக்கு லஞ்சம் கொடுத்ததுடன் உத்திராதி மட பரம்பரையை யூறித்தவர். அவருடைய குருவை த்ரோஹம் செய்தவர் என்று இருந்தால், அந்த வித்யாநிதி தீர்த்தரால் ஸ்ரீ மூலராமன் பரம சந்துஷ்டராய் அவருடைய ஜீவியதசைமுடிய அறுபத்தி எட்டு வருஷ காலம் தினசரி பூஜையை எப்படி பெற்றுவந்தார்? இப்பேர்ப்பட்ட சன்யாஸியாருடன் ஒத்துழைக்காமல் சிஷ்யர்களனேகர் இருந்திருக்கவேண்டியது ஸஹஜம். அப்படி இருக்க இதற்கு நேர்மாருய், இவர்கள் அனைவரும் ஏகோபித்து இந்த ஸ்வாமிகளை தனியாக இந்த மடத்தை ஸ்தாபித்துக்கொள்ள எப்படி அனுகூலமாய் இருந்தனர்? இதர எல்லா மடங்களைவிட வெகுவெகு அதிகமான சிஷ்யகோடிகள் அவர்களின் மூல மடத்தை

பரித்யாகம் செய்து, அப்பேர்ப்பட்ட வித்யாநிதி ஸ்வாமிகளுக்கு சிஷ்யர்களாய் இருக்கும் நிலையை ஏன் ஒத்துக் கொண்டனர்? கிருஷ்ணதேவராயரைப்போல் பிரபலரான சக்ரவர்த்தி ஸ்ரீ விபுதேந்திர தீர்த்தருக்கு வெகு சுவாதீனமாய் இருந்திருக்கையில், அந்த சக்ரவர்த்தியின் உதவியைக்கொண்டு, விபுதேந்திரர் தமக்கு விளைவித்த அக்ரமத்தை பரிஹாரம் செய்துகொண்டு, மீண்டும் அந்த ஸ்ரீ மத்வரின் பூஜா விக்ரஹங்களை கைப்பற்ற அவருக்கு முடிந்திருக்கிறதா? அல்லது அவருடைய தபஸ்ஸின் ப்ரபாவத்தாலாவது அந்த விக்ரஹங்களை மீண்டும் அடைய முடிந்திருக்குமல்லவா? எப்பேர்ப்பட்டதையும் ஸாதித்துக்கொள்ள சக்திபடைத்த ராஜகுருவான ஸ்ரீ விபுதேந்திரர் அப்படிக்கு யாதொன்றும் செய்யாமல், சும்மா இருந்தார் என்று சொல்வதால், அவருக்கு ஸ்ரீ மூலராமரிடம் நிர்மலமான பக்தி இருந்திருக்கவில்லை என்று சொன்னதுபோலாகி, பரமஹம்ஸரான அவருடைய நிர்மல கீர்த்திக்கு களங்கத்தை தீட்டியதாய் ஆகவில்லையா? இவ்வளவெல்லாம் கல்பனை என்பதைவிட்டு, குருவின் ஆக்ஞைப்படி அவருடைய சொந்த சிஷ்யரான ஸ்ரீ வித்யாநிதி தீர்த்தருக்கு ஸ்ரீ மூலராமர் அவருடைய ஸத்யஸங்கல்பத்தின்படி கிடைத்தார் என்று சொல்லியிருந்தால் குருகதா கல்பதரு முதலான அநேக ப்ரமாணங்களுக்கு விரோதத்தைக் கல்பிக்காமல் எல்வளவு அழகாய் இருந்திருக்கும்?

குரு சரிதையின் 87-வது பக்கத்தில் ஸ்ரீ நரஹரி தீர்த்தர் கஜானுவிலிருந்துவந்த ஸ்ரீ மூலராம சீதா விக்ரஹங்களின் பெட்டியை எடுத்துக்கொண்டு, எல்லா ராஜ மரியாதைகளுடன் புறப்பட்டு ஸ்ரீமத் ஆனந்த தீர்த்த பகவத் பாதகரிடம் ஒப்புவித்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பின்னடி 127-வது பக்கத்தில் ஸ்ரீ ரகுநந்தன தீர்த்தர் மூலராமரை எப்படியாவது மறுபடியும் தாம்

கைப்பற்றவேண்டும் என்று எண்ணி தம் ஸம்ஸ்தானத்தின் மூல புருஷரான நரஹரி தீர்த்தர் இந்த விக்ரஹத்தை ஸம்பாதிப்பதில் எவ்வகை ஸாமர்த்தியத்தைக் காட்டினர் என்பது அவருக்கு தெரிந்திருந்ததால் அந்த மூலபுருஷர் காட்டிய ஸாமர்த்ய பாதையை அவருடைய வம்சத்தாரான ஸ்ரீ ரகுநந்தன தீர்த்தர் கடைபிடித்தது ஸம்பிரதாயத்தை அனுசரித்ததாய் ஆகும் என்று பொருள் படும்படி எழுதப்பட்டிருக்கிறது. ஸ்ரீ நரஹரி தீர்த்தரோவெனில், எவ்வளவு காலம் கலிங்க தேசத்தை ஸம்ரக்ஷித்து சத்ருக்களான சபரர்களின் சங்கடத்தைப் போக்கி, ராஜ மஹிஷிக்கு புத்ரஸந்தானம் உண்டாக அனுக்ரஹம் செய்ததால், அந்த ஸதியின் பிரார்த்தனைக்கிணங்கி, ஸமஸ்தமான ராஜ மரியாதைகளுடனே அந்த ஸ்ரீ மூலராம சீதா விக்ரஹங்களை கொண்டுவந்தார். இது தான் ஸ்ரீ நரஹரி தீர்த்தர் காட்டிய ஸாமார்த்தியம். இந்த ரகுநந்தனரின் தூதனுய்ச் சென்றவன் என்று ஆராய்ச்சியில் பிறந்தவனை பாடந்தர ஜனசந்திரபட்டன் என்பவன் அப்பேர்ப்பட்ட என்ன சாமார்த்தியத்தைக் காட்டினுன்? உத்தராதி மடத்தின் ஸாம்ராஜ்யத்திற்கு ஏற்பட்டிருந்த எந்த சத்ருபயத்தைப் போக்கி, அந்த மடத்துக்கு சாந்தியைத் தந்து, அம்மடத்து பரிபாலனத்துக்கு பிரதான அங்கமாய் ஆனுன்? அந்த ஆசாமியின் அந்தரங்கமான பல சேவைக்கு எந்த குருதேவர் மகிழ்ந்துபோய், நன்றியறிவுடன் அவனுக்கு ஸ்ரீ மூலராமரைத் தந்தார்? எந்தெந்த மரியாதைகளுடன் கூடி மங்களகரமாய் ஸ்ரீ மூலராம விக்ரஹத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டு வந்தான்? ஸமஸ்தஸௌமாங்கல்யத்துக்கும் தேவதையான ஸ்ரீ ஸீதாதேவியாகிலும் அந்த விக்ரஹத்துடன் கூட இருந்தனளா? அந்த கலிங்க ராஜபத்னி ஸ்ரீ நரஹரி தீர்த்தர் செய்த உபகாரத்திற்கு ப்ரத்யுபகாரம் செய்ததுபோல், ராம பத்னியான நித்யாவியோகினியாய் எப்போதும் ராமரைவிட்டுப் பிரியாதவளான ஸ்ரீ ஸீதா

தேவியார், தன்னிடமிருந்து தன் பதியை பிரித்திழுத்துப் பறித்துப்போக முயன்ற இந்த சந்திரபட்டனின் உபகாரத்துக்கு ப்ரத்யுபகாரமாய் எந்த அனுக்ரக ரஸத்தை அவன்மீது சொறிந்தாள். ஆராய்ச்சியில்வந்த துஸ்சரிதையைச் சரிப்படுத்திக்கொள்ள இப்பேர்ப்பட்ட துஸ்சரிதையின் சாமர்த்தியம் மூலபுருஷராலேயே கைக்கொண்டது என்று அறிவித்து மூல புருஷரின் முகத்துக்கு கருப்பு பூசிய இந்த குருசரிதை என்னும் நூல் குரு ஜனங்களின் ஸச்சரிதமாகுமா அல்லது துஸ்சரிதமாகுமா என்பதை வாசகர்களே நிச்சயிப்பார்களாக. पवित्राणां पवित्रं त्रो मंगलाणां च मंगलम् । என்று சொல்லப்படும் ஸ்ரீ மூல சீதாராமரை தரிசிக்கவும் கூட எல்லா ஸத்வைஷ்ணவர்களான மாத்வர்கள் ஸ்நானம் செய்து பரிசுத்தர்களாய் வருகின்றனர், மங்களமான அவருடைய நாமாவையும்கூட விழுப்பாய் இருக்கும்பொழுது ஸ்நானம் செயயாமல் இருக்கும்பொழுது சொல்லவும்கூட பாபத்திற்கு பயந்தவர்கள் பயப்படுகின்றனர். இந்த விக்ரஹங்கள் படுக்கவைக்கப்படாமல் சரியாயிருக்கையில் அவைகளைத் தொடவும்கூட ஸ்ரீமத்வாசாரியாரின் பரம்பரையைச் சேர்ந்த குருவின் அனுக்ரகம் படைத்துள்ள பரமஹம்ஸர்களுக்குத்தான் அருகதை காணப்பட்டுவருகிறது. இத்தகைய பவித்ரப்ரதிமையை ஓர் வெறும் ஆசாமி பாடத்துபட்டன் பல சேவைக்காரனாய் இருந்த ஆஸ்பதத்தின்பேரில் ஸ்ரீரகுவர்ய தீர்த்தருக்கு ப்ராணனைவிட ப்ரியமான அவரால் ஆராத்ய தெய்வமாயுள்ள ஸ்ரீமூலராமர் விக்ரஹத்தை திருடமுடிந்திருக்குமா? அர்த்தராத்திரியாகிய அமங்களமான காலததில் படுக்கப்போடாமல் வைத்திருந்த விக்ரஹத்தை விழுப்புடன் தொட்டுத் திருடி இருளில் வழியில் இருந்தவர்களை எல்லாம் காலால் மிதித்துக்கொண்டு ஓடினான் என்று ஆராய்ச்சியில் சொல்லப்படும்பக்ஷத்தில், இப்பேர்ப்பட்ட சாஸ்திர நிஷித்தமான ஹீனகார்யம் செய்யமுற்படுமுன் அவனுடைய நெஞ்சம் எப்படி நடுங்காமல் இருந்தது? நீட்டியகராள கைகள் துண்டித்து

எப்படி விழாமல்போயிற்று? இப்பேர்ப்பட்ட மகாபாதகத்தைச் செய்தவனுக்கு இந்த பட்டனுக்கு மட்டிலன்று அவனுடைய வம்சத்திற்கே ஸ்ரீ ரகுநந்தனதீர்த்த ஸ்வாமிகள் மற்றும் ஸ்ரீஸுரேந்திரதீர்த்தஸ்வாமிகள் அக்ஷணமே பஹிஷ்கார உத்தரவை விதித்தனர் என்று அந்த நூலில் சொல்லப்பட்டிருந்தால் அந்த வார்த்தை பொருத்தமுள்ளதாய் இருக்கும். மேற்கண்ட குருமார்களான ஸ்வாமிகளின் ப்ரபாவத்திற்கு அனுஸரணையாய் இருந்திருக்கும். அவ்வாறு சொல்வதைவிட்டு தபோநிதிகளான இந்த ஸ்வாமிகள் இப்பேர்ப்பட்ட காரியத்திற்கு சுயம் ப்ரேரகர்களாய் இருந்தனர் என்றும் பட்டன் செய்தகாரியத்திற்காக அவனுக்கு விசேஷ மரியாதைகளைச் செய்தனர் என்றும் கௌரவ அதிகாரப் பதவியையும் இனாம்களையும் சிலாகனைகளையும் அனுக்ரஹித்தனர்' என்றும் இவ்வாரெல்லாம் அந்தநூலில் சொல்லப்படுவது கோரமான குருநிந்தை என்றே எந்த ஆஸ்திகனும் எண்ணி இவைகளை கேட்பதே பெரும்பாதகமென இரு காதுகளையும் மூடிக்கொள்வான்.

உத்தராதி மடத்துக்குச் சேர்ந்த ஸ்வாமிகள் எல்லோரும் பேச்சுக்கு ஸன்யாஸிகளே அன்றி சக புருஷர்களாய் இல்லை எனப்படுகிறது. இன்னார்தான் சகபுருஷர்கள் இதரர்கள் இல்லை என்று சொல்ல சுவயம் சகபுருஷர்களாய் இருக்கவேண்டும். அதிலும் தேவாம்சர்களான விரக்தர்களின் ஸ்வரூபத்தை நிர்ணயம்செய்ய தேவோத்தமர்களுக்குத்தான் அருகதை உண்டு. இந்த விஷயத்தில் உத்தராதி மடத்துக்குச் சேர்ந்தவரான ஸ்ரீ கிருஷ்ணத்வைபாயன தீர்த்தஸ்வாமிகள் ஒருவராகிலும் அந்நூல் ஆராய்ச்சியிலிருந்து தப்பித்துக்கொண்டுவிட்டார். குருசரிதை 299-300 பக்கங்களில் ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள் விமானத்தில் ஏறிச்செல்லும் ஸ்ரீகிருஷ்ணத்வைபாயன தீர்த்தஸ்வாமிகளைக் கண்டதும், எழுந்து நின்று இரண்டுதரம் அவரை துதித்துவிட்டு தனக்கு இன்னமும் எவ்வளவுகாலம் பாக்கி

இருக்கிறதென்று அவரை ஸ்ரீராகவேந்திரர் கேட்டதாய் சொல்லப்பட்டிருக்கிறது. அபரோக்ஷக்ஞானிகளான ஸ்ரீ ராகவேந்திரகுரு ஸார்வபௌமர் ஸ்ரீ கிருஷ்ணத்வைபாயனரை யோகசக்ஷுஸ்ஸால் பார்த்தமாத்திரத்தில் எழுந்து நின்று இரண்டு தடவை ஸ்தோத்திரம் செய்யவேண்டுமானால், அவருக்குத் தெரியாத விஷயத்தை அவரைக் கேட்டு தெரிந்துகொள்ளவேண்டுமானால் அந்த கிருஷ்ண த்வைபாயன தீர்த்தர் ஒருவராவது சகபுருஷராய் இருந்திருக்கவேண்டுமல்லவா? அவர் பெயரைக்கொண்டு உத்தராதி மடத்துக்கு ஏன் ப்ரசித்தி ஏற்படவில்லை. ஸ்ரீவித்யாநிதி தீர்த்தர் ஸ்தாபித்த மடத்துக்கு உத்தராதிமடம் என்று பெயர் வந்ததற்கு என்ன சம்பந்தம்? அவர் உத்திர தேசத்திலிருந்து வந்ததால் அவர் மடத்துக்கு உத்தராதி மடம் என்றபெயர் வந்ததென்றால் உத்தரதேசத்தினரான ஸ்ரீபத்மநாபதீர்த்தர் முதலானவர்கள் தம் மடத்தை உத்தராதி மடம் என்று சொல்லியிருப்பது பொருத்தமில்லை என்று அந்த நூலே முதலில் ஒப்புக்கொள்ளாமல் இருக்கிறதல்லவா? ஸ்ரீமத்வாசாரியாரின் முக்ய ஸம்ஸ்தானமான ஸ்ரீ ராகவேந்திரஸ்வாமி மடத்தில் இருந்துவரும் ஸ்ரீ மூலராமரை அதே மடத்தில் அவதரித்த ஸன்யாஸிகளாய் இருந்து பூஜிக்கும் ஜன்மம்தான் சரமதேஹம் (கடைசி சரீரம்) என்பது க்ஞானிகளின் அபிப்பிராயமென அந் நூலின் 96வது பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வாறே பூஜித்திருந்த ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகள், அந்த தேஹம் சரமதேஹம் கடைசி தேஹமாய் இருக்கும்பக்ஷத்தில், மறுபடியும் உத்திராதிமடத்தில் ஸ்ரீஸத்யஸந்த தீர்த்த ஸ்வாமிகளாய் ஏன் ஜன்மாவை அடைந்தார்? பூர்வம் அதே மூலராமரை ஸன்யாஸ ஆசிரமத்தில் பூஜித்த ஸ்ரீ ஆனந்ததீர்த்த பகவத்பாதாள் பின்பு சதுர்முக ப்ரம்மாவாய் ஏன் பிறந்தார்? அதே நியாயத்தின்படி ஸன்யாஸிகளாய் இருந்து ஸ்ரீமூலராமரை பூஜித்த உத்தராதி

மடம் ஸ்வாமிகளான ஸ்ரீவித்யாநிதி தீர்த்தர் ஸ்ரீ ரகுநாத தீர்த்தர் இவர்களுக்கும் சரமதேகம் ஆகின்றன அல்லவா?

286-ம் பக்கத்தில் ஸ்ரீயாதவாசாரியார் ஸ்ரீனிவாஸ தீர்த்தரை மூலராமருடைய நைவேத்யத்தை திரஸ்கரிக்கலாமா என்று கேட்டார் என்று அந்த நூலில் சொல்லப் பட்டிருக்கிறது. யாதவாசாரியாள் ராமருடைய நைவேத்யத்தை என்று சொல்லாமல் அந்த ராமரை மூலராமர் என்று சொன்னதாய் சிலாசாஸனங்கள் முதலானவைகள் கிடைத்திருக்கின்றனவா என்ன? அப் பெரியார் மூல விசேஷணத்தை விட்டு சாதாரணமான ராமர் என்ற பெயரைச் சொன்னதாய் எழுதிவிட்டால் இந்த குரு சரிதையின் ஆராய்ச்சிக்கு அனுகூலமில்லாமற் போகுமோ என்ற பயத்தாலோ என்னமோ நெடுக இந்த குருசரிதையில் ஸ்ரீ ராகவேந்திரஸ்வாமி மடம் சம்பந்தமாய் இருக்கும் ஸாமானியப் பேச்சிலுங்கூட ராமர் என்ற சொல்லவேண்டிய இடங்களில் எல்லாம் மூலராமர் என்றே சொல்லப்பட்டு வருகிறது. இதற்கு ஆதாரமாய் ஏதாவது தாம்பிர சாசனங்கள் முதலானவைகள் இருந்திருக்கின்றனவா என்ன?

மடத்ரயங்கள் பரஸ்பரம் சிநேகபாவத்துடன் வளர்ந்து வந்ததாய் 121வது பக்கததில் விவரிக்கப்பட்டிருக்கிறது. இது உண்மைதான். எப்போதும் புராதன மடாதிபதிகள் எல்லோரும் உத்தராதிமடத்தின் பரிசுத்த பரம்பரைக்குத் தகுந்தபடி யோக்யமான கௌரவ புத்தியைக் காட்டி வந்தனர். இவ்வாறு நடந்துவருகையில் இந்த குருசரிதை ஆராய்ச்சிமட்டில் ப்ராசீன பரம்பரையை நிர்பயமாய்தாக்கி அதை முறியடித்து, பேசாதிருந்த உத்தராதி மடத்தார்களை வலுவில காரணமில்லாமல் திட்டி அவர்களுக்கு அவமானமும மனகலேசமும் ஏற்படும்படி இவ்வாறு பொருள்படும் படி எழுதி இருக்கிறது. உங்கள உததராதி மடத்தின் மூல புருஷர் வித்யாநிதிஸ்வாமிகளே அல்லாமல் நீங்கள் அறிந்து

கொண்டபடி ஸ்ரீமத்வாசாரியார் அல்ல. உங்களுடைய குலம் சாமானியமானது. உங்கள் குலப்ரவர்த்தகரான வித்யாநிதி ஸ்வாமிகளுக்கு உங்கள் மடத்தில் ஆசிரம ரூபமாகிய ஜன்மா சுத்தமானதல்ல. அவர் எங்கிருந்தோ வந்து, உங்கள் மடத்தில் கபடமாய் உட்புகுந்து வ்யாபிக்கிறவர். அவருடைய சுபாவமும் நீதியும் நடவடிக்கையும் நிந்திதமானவைகள். ஸ்ரீராமசந்திர தீர்த்தர்போன்ற ஜகத்குருமார்களின் த்ரோஹத்தை சட்டைசெய்யாமல், அவருடைய அந்தியகாலத்தின் ஆக்ஞையைத் திக்கரித்து, நம்பிக்கையுடன் வைத்திருந்த மூலராமர் முதலான விக்ரஹங்களை பட்டப்பகலிலேயே அபஹாரம் செய்தவர். லஞ்சம் கொடுத்து ஜனங்களைக்கூட்டி ஆரவாரம் செய்துள்ளார். அவருடைய மடத்துக்கு உத்ராதிமடம் என்ற ஆபாசமான பெயரை தந்துள்ளார். இப்பேர்ப்பட்ட இழிவான க்ருத்யமுள்ளவரின் வம்சத்தில் சரமதேஹம் ஜீவன் முக்தி உள்ள சகபுருஷர்கள் எப்படி பிறப்பெடுப்பார்கள்? இந்த குலத்துக்குத் தகுந்த பாமர ஸன்யாஸிகள்தான் இந்த குலத்தில் ஜன்மம் எடுத்து எப்படி இப்படி வம்சத்தை நடத்திவந்து கொண்டிருக்கின்றனர்.'' என்று இவ்வாறெல்லாம் கூடமான அபிப்பிராயத்துடன் பலகதைகளைச்சொல்லி வெளியிட்டு அந்த நூலுக்கு கோமுகமாக குருசரிதை என்ற பெயர் கொடுத்து, அத்துடன் அந்த நூல் அநேக கிரந்தங்களின் ஆராய்ச்சிமேல் வந்ததென்றும் இதற்கு ஆதாரமாய் தாம்பிரபட்டயங்கள் சிலாசாஸனங்கள் மூலகிரந்தங்கள் முதலியவை இருக்கின்றனவென்றும் பறைசாற்றப்பட்டிருக்கிறது. உத்தராதி மடத்தார்களுக்கு துக்கத்தை விளைவிக்கும் இந்த ஆராய்ச்சி நூலால் ஸஜ்ஜனங்கள் எவ்வளவு மட்டில் சந்தாபமடைந்து கண்ணீர்விடுவார்கள் என்பது அறியப்பட்டிருப்பதாய் தெரியவில்லை. அதனுல் என்னென்ன சங்கடங்கள் சமூகத்தில் ஏற்படும் என்பதில் யோசிக்கப்பட்டதாய் தெரியவில்லை.

தோஷமில்லாத குருசரிதையை சொல்லப்போவதாய் துவக்கத்தில் சொல்லிவிட்டு 114 - 120 பக்கத்துக்கு வந்தவுடன் மடங்களின் பெயர் முதலான தலைப்பு கொடுத்து குரு ஸமூகத்துக்கு தோஷங்களைத் தரும் அத்யாஸவாதத்தை ஏன் இந்த ஆராய்ச்சியில் ஆரம்பிக்கப்பட்டதோ தெரியவில்லை. உத்தராதி மடம் அதத்வம், அதன் உத்கர்ஷத்தை ஏற்படுத்திக்கொடுக்கும் ப்ரமாணங்கள் எல்லாம் அதத்வாவேதகம் என்று ஏனோ செய்யப்படவேண்டும்? பிரயோஜனத்தை. எதிர்பார்த்து செய்யப்பட்டிருக்கும் இந்த குருசரிதையின் அத்யாஸவாதத்திற்கு என்ன உங்கள் பதில் என்று கேட்கப்படும் பக்ஷத்தில் मानाधीनामेयसिद्धिः नप्रयोजनाधीना என்று ப்ராசீனர்களின் பிரமாணங்களைக் காட்டுவதே இந்த அத்யாஸவாதத்திற்கு பாதகமாகும். உத்தராதி மடத்தின் உத்கர்ஷத்தைப் பொறுக்காமல் அசூயையின்பேரில் குருசரிதையில் சொல்லப்பட்ட ஆரோபணைகளால் உத்தராதி மடத்துக்கு எள்ளளவும் குறைவு ஏற்படாது. அஸுரர்களை மோஹிப்பதற்காக ருத்ரனுக்கு ஆக்ஞை ஏற்பட்டதுபோல் இந்த குருசரிதை ஆராய்ச்சிக்கு

अतथ्यानि वितथ्यानि दर्शयस्व महाद्विजः ।
प्रकाशं स्वमठं कुर्याः दुष्प्रकाशं मठान्तरम् ॥

என்று ஆக்ஞை ஏற்பட்டிருக்கவேண்டுமென அர்த்தமாகிறது.

குரு ஸார்வபௌமரான ஸ்ரீ ராகவேந்திரஸ்வாமிகளுடையவும் மற்றும் குருஜனங்களுடையவும் சரித்திரத்தைச் சொல்வது குருசரிதையின் உத்தேசம் என்று எந்த நூலில் சொல்லப்பட்டிருந்தபோதிலும், இந்த நூலின் தாத்பரியம் மட விசேஷத்தின் திரஸ்காரத்தில்தான் என்பதைக் காட்டும் லிங்கங்கள் — அடையாளங்கள் இருக்கின்றன. தன் மடமான ஸ்ரீ ராகவேந்திரஸ்வாமி மடத்தின் பிரஸ்தாபம் வந்தபோதெல்லாம் ஸ்ரீமடம், முக்ய மடம், மூல மடம், மஹா ஸம்ஸ்தானம், மத்வாசாரியார் ஸம்ஸ்தானம், வித்யாமடம்

என்றெல்லாம் அடிக்கடி அப்யாஸத்தால் எழுதி இருப்ப தைப் பார்த்தால், 'நபவான் இதி வாக்யசேஷ:' என்ற நியாயத்தின்படி உத்தராதிமடம் ஸ்ரீமடம் அல்ல; மூலமட மல்ல; முக்யமடமல்ல; அல்பமடம்; ஆசார்யனில்லாத மடம் என்று த்வன்யர்த்தம் ஏற்படுகிறது. மற்றும், ஆங்காங்கு ஸ்பஷ்டமான பதங்களாலும் சொல்லப்பட்டிருக்கிறது. தன் மடத்தில் இருக்கும் ஸ்ரீ ராமரை, மூலராமர், மூலராமர் மூலராமர் என்று ஆயிரம் தடவை வர்ணித்துக்கொண்டு போய்விட்டால் உத்தராதி மடத்திலேயே நிலைநின்றிருக் கும் மூலராமரின் யோக்யதையை நிர்மூலமாக்கிவிடலாம் என்று தோற்றமாகிய அபூர்வத்தை காணப்படுகிறது. தன் மடத்தில் அடைந்த யதிதேஹம்தான் சரமதேஹம் மோக்ஷ பலனை அடைந்திருப்பது என்றும், பாக்கி உத்தராதி மடத் தின் யதிகளுக்கு அவ்வளவு பலனில்லை என்றும் சொல்லப் பட்டிருப்பதைக்கொண்டு பயம் என்னும் லிங்கமும் அனு ஸந்திக்கப்பட ஏற்படுகிறது. இவ்வாறு தாத்பர்ய லிங்கங் களை விமரிசித்தால் குரு சரிதை என்னும் நூலுக்கு

उत्तरादि मठेशानां मुनीन्द्राणां महात्मनाम् ।
मुहुः मुहुः मानभंगे महातात्पर्यमीयते ॥

உத்தராதிமடம் மகா ஸ்வாமிகளின் மானபங்கத்தில்தான் மகா தாத்பர்யம் என்று ஏற்படுகிறது.

இவ்வாறு தன் மடத்திற்கும் இதர மடங்களுக்கும் ஸ்நேகபாவத்தை அழியச்செய்யும் துர்வாதங்களை கை பிடித்த இந்த குருசரிதையில் துவக்கத்தில் சொன்னபடி, மாத்வமடங்களில் இதனால் எப்படி ஸௌஜன்யம் ஏற்படும்? குருசரிதைகாரருக்கு அவ்வாறு மடத்ரயங்களில் அன்பு ஏற்பட அபிப்பிராயம் இருக்கும் பக்ஷத்தில் இப்போதா கிலும் இதர மடங்களின் விஷயத்தில் செய்யப்பட்டிருக் கும் ஆதாரமற்ற ஆரோபணைகளை தாமதமின்றி வாபீஸ் பெறவேண்டும். இனி இம்மாதிரியான காரியத்தில் பிர

விருத்திக்காதிருக்கவேண்டும். எல்லா மடங்களிலேயும் உலகம் வணங்கும் உத்தம புருஷர்கள் அவதரித்திக்கின்றனர்; ஸாதுக்களிடம் கருணாரஸத்தை பொழிந்திருக்கின்றனர். அவர்கள் செய்த பேருதவிக்கு மோக்ஷத்திலும் கூட பதில் செய்யமுடியாது. மூலராமர் எந்த உத்திராதி மடத்தில் பரம்பரையாய் வந்திருந்தாரோ அங்கேயேதான் நிலைத்திருக்கிறார். பரமபூஜ்யாளான எந்த மடத்து ஸ்வாமிகளே ஆகட்டும் அவர்கள் அந்த மூலராமரை திருடவில்லை. திருடச் செய்யவும் இல்லை. அப்படி நடந்திருக்கும் பக்ஷத்தில் மடங்களில் பரஸ்பரம் அப்போதிருந்து சிநேகம் ஏற்பட்டிருக்கவேமாட்டாது. இந்த விவாதம் கிளம்பியிருந்தால் அந்தகாலத்தியவர்கள் பற்பலவகையாய் விரோதமாயும்கூட சொல்லியிருப்பார்கள். இந்த விவாதமே காதுக்கெட்டாதிருந்தகாலத்தில் அநேகரால் எழுதப்பட்டிருக்கும் அபிநவசந்திரிகை, ஸத்யநாதமாகாத்ம்யம், ரத்னகரம், ப்ரகாசம் ஸத்யபோத விஜயம், குருகதா கல்பதரு முதலான நூல்களை நிஷ்பக்ஷபாதமாய் பரிசீலனை செய்யப்படட்டும். ஸ்ரீ ஸத்யபோத விஜயம் என்னும் நூல் அந்த மகான் இருக்கும்போதே அவருடைய காலத்தில் இருந்தவரால் அரசனின் மேற்பார்வையில் எழுதப்பட்டது. அந்த நூலில் உண்மைக்குமாறான பொய் கதைகளை அந் நூலாசிரியர் எழுதியிருந்தால் ராஜதண்டனைக்கு அவர் உட்பட்டிருப்பார். மற்றும் மகாத்மாவான அந்த ஸ்வாமிகளும் அந்நூலை திரஸ்கரித்திருப்பார்கள். இந்த விமரிசையில் அந்நூலில் கண்ட ஆதாரங்கள் காட்டப்படுகின்றன. மற்றும் பல பிரமாணங்களை சித்தசுத்தியுடன் பார்த்தால் சோதித்துப் பார்ப்பவர்களுக்கு உத்திராதி மடத்தின் மாசற்ற உயர்தர நிலை நன்கு விளங்கும் என்பது சந்தேகமில்லை. சிம்ஹம் சிம்ஹமே என்று ஏற்பட எந்த ஆராய்ச்சியும் வேண்டியதில்லை. இதற்காக எப்பேர்ப்பட்டவரும் பிரவிருத்திக்கவேண்டியதில்லை. இப்பேர்ப்பட்ட ஆயிரம் ஆராய்ச்சிகள் நடந்தது, இல்லை என்று சொன்னபோதி

லும் அதன் சிம்ஹபாவம் போய்விடாது. மஹா புருஷ ருடையவும் அவருடைய ஸம்ஸ்தானத்தினுடையவும் உத்கர்ஷத்தை அழித்ததின் மகாபாதகம்தான் அவ்வாறு செய்தவருக்கு ஏற்படும். தன் மடம்தான் மேன்மைபெற்றது என்று சாதனை செய்துகொள்ளும் சம்பிரமத்தில் இதர மடத்தின் ஸத்குருவர்யர்களை நிந்திக்கும் பாபத்திற்கு இரையாகாமல், மனம் நிம்மதையுடன், ஆக்ரஹத்தைவிட்டு, தொன்றுதொட்டு பரம்பரை கிரமமாய் பிராசீனர்கள் சொல்லிவந்த விஷயங்களை ஒப்புக்கொண்டு, மாச்சரியமில்லாமல் நடந்துகொண்டால், எல்லோருக்கும் நன்மை ஏற்படும் என்பதில் சம்சயமில்லை. குருசரிதை விமரிசையின் உத்தேசம் இதுவே.

கேசவாசாரியார் கட்டே,

பாகல்கோட்டை.

॥ श्रीः ॥

॥ श्री गुरुभ्यो नमः ॥

॥ श्रीशोविजयतेतराम् ॥

குரு சரிதை விமரிசை

यत्पदं वेदसंवेद्यं कटाक्षेणापि. वीक्षितुम् ।
न क्षमंते विमतयः तमुपासे श्रियःपतिम् ॥

(सुधा अध्याय २)

ஓர் நாடு முன்னேற்றமடைந்திருப்பதாய் அறிவிப்பது அந்த நாட்டின் சரித்திரமே. அதற்காக அந்த சரித்திரத்தை சரியான படி அறிவிக்கவேண்டியது யாருக்கும் முக்யமான கடமை. அதைப் போலவே இல்லாததும் பொல்லாததுமான விருத்தாந்தை அறி விக்கும் அசம்பாவிதமான சரித்திரத்தால் ஓர் நாடு எப்படியோ அப்படி ஓர் சமூகம் சீர்குலைந்து போகும். அதன்படி இக்காலத்தில் தார்மிக உலகததை உயர் தூக்க ப்ரயத்தனம் செய்யவேண்டியதாய் இருக்கையில், ஸ்ரீ வேதவ்யாஸாசாரியார் எம். ஏ. அவர்கள் குருசரிதை என்று ஓர் சரித்திரத்தை சமூகத்தாரின் முன்னேவைத்து விட்டது துரதிர்ஷ்டமே. இந்த சரிதையில் சொல்லப்பட்டிருக்கும் உண்மைக்கு மாருன விஷயங்கள் தார்மிகர்களின் சரித்துரங்களை எல்லாம் தோஷம் கொண்டதாய் செய்திருக்கின்றன. அதனுல் அந்த நூலில் சொல்லப்பட்டிருப்பது ஸத்தியமா அஸத்தியமா என்று விசாரம் செய்யப்பட அவசியம் ஏற்பட்டது. அந் நூலில் உள்ள அஸத்தியமான விஷயங்களை எல்லாம் எடுத்துக்காட்டுவது இந்த நிரூபத்தின் உத்தேசம்.

குருசரிதையில் 60-வது பக்கத்தில் அர்ச்சாகதிக்ரமம் என்னும் ஓர் நூலில் சொல்லியுள்ள

कर्णतो वर्णतश्चैव पीठतः परिमाणतः ।
सीतारामार्चयोस्साम्यं.................. ॥

என்னும் சுலோகத்தை அதன் ஆசிரியர் தமக்கு ஆதாரமாய்

உதாஹரித்திருக்கிறார். ஆனால் வாசிஷ்ட ராமாயணம் அத்யாயம் 11 சுலோகம் 31-ல்

> सर्वाभीष्टप्रदा देवी मया दत्ता तवानघे ।
> शुभ्रां ताम्रमयीं संस्थां ब्रह्मणा चिरपूजिताम् ॥

என்று மூலராமரின் லக்ஷணம் சொல்லப்பட்டிருக்கிறது.

உத்தராதி மடத்தில் ஸ்ரீமூலராமர் விக்ரஹம் இருந்து வந்ததென்பதை குருசரிதை ஆசிரியரே ஒப்புக்கொள்ளுகிறார். உத்தராதி மடத்தில் உள்ள ஸ்ரீமூலராமர் விக்ரஹத்தைச்சேர்ந்த ஸ்ரீ சீதா விக்ரஹம் பித்தளை வர்ணமுள்ளது. மேலே சொன்ன வாசிஷ்ட ராமாயண வாக்கியத்தின்படி, ஸ்ரீமூலராமர் விக்ரஹம் தாம்பிர வர்ணமாய் இருக்கையில், ஸ்ரீமூலராமர் விக்ரஹத்திற்கும் ஸ்ரீசீதா விக்ரஹத்திற்கும் வர்ணத: ஸாம்யம் (இரண்டும் சமான மான வர்ணமுள்ளது என்று) இருப்பதாய்ச் சொல்லும் அர்ச்சாக க்ரமம் என்னும் நூலின் ப்ராமாண்யத்தை எப்படி ஒப்புக்கொள்ள முடியும் என்பதை வாசகர்களே விசாரம் செய்யட்டும்.

மற்றும் குருசரிதை 18-வது பக்கத்தில், ஸ்ரீ மூலராமர் ஸ்ரீராகவேந்திரஸ்வாமி மடத்தில் இருக்கிறார் என்பதற்கு ஆதாரம் என்று ஸ்ரீ ஜகந்நாததாஸருடைய "ರಾಮನ ನೋಡಿರೆ, ನಿಮ್ಮಯ ಕಾಮಿತ ಬೇಡಿರೆ" என்னும் தாஸர் பதத்தை, அதன் ஆசிரியர் உதாஹரணம் செய்திருக்கிறார். இந்த தாஸர் பதத்தால் ஸ்ரீ ராகவேந்திரஸ்வாமி மடத்தில் ஸ்ரீ மூலராமர் இருப்பது சித்திக்காது. ஏனெனில் ஸ்ரீ ஜகந்நாததாஸர் இயற்றிய ஹரிகதாம்ருதஸாரம் என்னும் நூலுக்கு பலசுருதியை எழுதிய அவருடைய ஸாக்ஷாத் சிஷ்யரான, ஸ்ரீவிட்டலதாஸர், கர்ஜிகேயில் இருக்கும் விட்டலர் விக்ரஹத்தைப் பார்த்து, "வேனிது கௌதுகவோ விட்டல, பண்டரீயனுபிட்டு, இல்லியாதகே பந்தேயா விட்டல· (பல்லவி) மித்யாவாதிகளு, விட்டல நின்னனு ஸூத்திகொண்டு, அத்துகரேது, கூகுத்தலிரே, பேஜத்து இல்லிகே, பந்தேயா விட்டல" என்று பாடியுள்ளார். இதனால் கர்ஜிகியில் வசிப்பவர்கள் பண்டரி பாண்டுரங்கனை கர்ஜிகிக்கு கொணர்ந்து வைத்துவிட்டனர் என்றாவது, ஸ்ரீபாண்டுரங்கனே கர்ஜிகிக்கு வந்துவிட்டார் என்றாவது அர்த்தம் செய்ய முடியுமா? விட்டலன் என்றால் பண்டரீபுரத்திய விட்டலன்தான். அவரை எல்லா விட்டல ப்ரதிமைகளில் காணும் ஸ்ரீதர விட்டல தாஸர், கர்ஜிகியில் உள்ள விட்டலர் விக்ரஹத்தில் அந்த பண்டரி விட்டலரைக் கண்டுகொண்டு,

மேற்கண்டவாறு பதத்தைப் பாடினார் என்று சொல்வது பொருத்தமாயும் ப்ராமாணிகமாயும் இருக்கிறது. இந்தப் படியேதான் ஸ்ரீஜகந்நாத தாஸரும், ஸ்ரீவஸுதேந்திரர் பூஜிக்கும் ஸ்ரீராமர் விக்ரஹத்தில், சதுர்முகனின் கையால் பூஜிக்கப்பட்டதாயுள்ள உத்தராதி மடத்திலுள்ள ஸ்ரீ மூலராமரைக் கண்டுகொண்டு மேற்கண்ட தன் பதத்தில் அவ்வாறு பாடியுள்ளார். அந்த தாஸர்வாளின் அபிப்ராயமும் இதுவே. அதனால்தான் ஸ்ரீஜகந்நாத தாஸர் அந்த பதத்தில் “அலவபோத முனி அதிமோததலி அர்ச்சித இளெயொளு பஹுபதிகர பூஜித” என்று துவக்கத்தில் சொல்லி, பின்னாடி வஸுதேந்த்ரார்யர ப்ரிய, என்றுதான் பாடினாரே அன்றி, வஸுதேந்த்ரார்யகர பூஜித என்று பாடவில்லை. இதனால் வஸுதேந்திரர் சுயம் ஸ்ரீமூலராமரை பூஜிக்காதிருந்தாலும் அவர் பூஜித்துவரும் ஓர் ராமப்ரதிமையில் ஸ்ரீமூலராமரைக் கண்டுகொண்ட மஹனீயர் என்பது ஸ்ரீஜகந்தாததாஸரின் அபிப்ராயம். இந்த அபிப்ராயம் இல்லாமற்போனால் வஸுதேந்த்ரார்ய கரபூஜித என்று ஸ்பஷ்டமாகவே அவர் பாடியிருப்பார்.

மற்றும் குருசரிதையின் 112-வது பக்கத்தில், ஸ்ரீவிபுதேந்திர தீர்த்தருக்கு ஸன்யாஸம் கொடுத்த பின்பு, அவருடைய குருவான ஸ்ரீராமசந்திர தீர்த்தர், திக்விஜயராமர் விக்ரஹத்தை ஸ்ரீவிபுதேந்திரருக்குக் கொடுத்து, அவரை திக்விஜயம்செய்து வாதி நிக்ரஹத்தைச் செய்துவரும்படி ஆக்ஞாபித்தார் என்று இந்நூல் ஆசிரியர் எழுதியுள்ளார்.

ஆனால் உத்தராதிமடம் ஸ்வாமிகளான ஸ்ரீரகுநாத தீர்த்தரின் காலத்தில் ஸ்ரீபுரந்தரதாஸர் அடியிற்கண்டவாறு பாடியுள்ளார்.

176144

॥ पुरंदरदासर पद ॥

[राग – मुखारि;] [ताळ – झपे.]

मध्वरायर देवतार्चनेय प्रसिद्ध ।
रघुनाथरु पूजिसुव सोबगु नोडि ॥
मूलरघुपति ओंदु मुद्दुजानकि ओंदु
लीलदिग्विजय राम मूरुति ओंदु
सालग्राम हयग्रीव मोदलादवु नाल्कु
चलुव सुदर्शन मूरु चक्राणिकगळेंदु (मध्व) १

अभिषेक शङ्खवोंदु अक्षयपात्रे ओंदु
उभय पश्चिमधे मुगळुयेरडु
शुभनिधि बलमुरी शङ्खवोंदु
रामबाणकलेरडु रामठंकि ओंदु (मध्व) २

वरव्यासमुष्टि नालक्कु
क्षीरदि लोलयाडुव कूर्मवोंदु
स्मरिशिप्पवेंडु मूर्तिगळनु
पुरंदरविठ्ठलन पूर्ण भक्तरेंब
ईरघुनाथतीर्थरु यट्ट पुण्यवंतरो मध्व) ३

ஸ்ரீபுரந்தரதாஸர், ஸ்ரீவித்யாநிதி தீர்த்தரின் சிஷ்யரான ஸ்ரீரகுநாததீர்த்தரின் காலத்தில், இந்த ரீதியில் பாடியிருப்பதைக் கொண்டு, அதற்கு வெகு வருஷங்களுக்கு முன்பு, ஸ்ரீராமசந்திர தீர்த்தர் ஸ்ரீவிபுதேந்திர தீர்த்தருக்கு ஸ்ரீதிக்விஜயராமர் விக்ரஹத்தைக் கொடுத்தார் என்பது கட்டுக்கதையே ஆகிறது. மேலும் ஸ்ரீராமச்சந்திர தீர்த்தர் ஸ்ரீவிபுதேந்திர தீர்த்தருக்கு திக்விஜயராமர் விக்ரஹத்தைக் கொடுத்தார் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. சாதகமாய் ஆதாரம் இல்லாததுடன், நேர்விருத்தமாய் குருகதா கல்பதரு 7-வது ஸர்க்கத்தில் சுலோகம் 23, 25-ல் அடியிற்கண்டவாறு சொல்லப்பட்டிருக்கிறது.

ततस्तु रामचन्द्राख्य तीर्थास्साम्राज्यमागतम् ।
कृत्वा मुदाददुः श्रीमद्विबुधेंद्रेभ्य एवच ॥२३॥
मठस्थ राम प्रतिमामेकां साधरणां तथा ।
जयतीर्थाचार्यदत्तं सालग्रामं हयास्यकम् ॥२४॥
दत्वानुज्ञां तथातेभ्यः संचारार्थं महीतळे ।
प्रेषयामासु रथ ते प्रसंगं चक्रिरे परैः ॥२५॥

என்றிவ்வாறு ஸ்ரீராமச்சந்திர தீர்த்தர் ஸ்ரீவிபுதேந்திர தீர்த்தருக்கு, ஸ்ரீமத்வாச்சாரியார் பூஜிக்காதிருந்த ஓர் சாமானியமான

ராமர் விக்ரஹத்தைத்தான் கொடுத்தார் என்று சொல்லப பட்டிருக்கிறது.

குருசரிதை 113-வது பக்கத்தில் அதன் ஆசிரியர் "ஸ்ரீராமச் சந்திர தீர்த்தர் கன்னட தேசத்தில் சஞ்சரித்துவந்து, மலகேடா வின் சமீபத்தில் உள்ள எரகோளம் என்ற ஊருக்கு வந்தார். அங்கு அவருடைய நிர்யாண காலம் சமீபித்தது. அவ்விடத்திய ப்ரமுகர்கள் எல்லோரையும் வரவழைத்து, அவருடைய உத்தராதி மடம், ஸம்ஸ்தானத்தின் விக்ரஹங்கள், மற்றும் அமூல்யமான பதார்த்தங்கள் இவைகளை அந்த ப்ரமுகர்களிடம் ஒப்படைத்து, அவருடைய சிஷ்யரான விபுதேந்திர தீர்த்தர் அவ்விடம் வந்தால், அவைகளை அவரிடம் ஒப்புவிக்கவேண்டுமென்று சொல்லி, நள வருஷம் வைசாக சுத்த ஷஷ்டியன்று காலமானுர்" என்று சொல்லி யுள்ளார். இதற்கு ஆதாரமாய் குருகதாகல்பதருவின் சில சுலோகங் களை உதாஹரித்திருக்கிறுர். அந்த சுலோகங்களாவன :—

ततस्तु रामचंद्राख्य तर्थिास्साम्राज्य मागतम् ।
कृत्वामुदाददुः श्रीमद्विबुधेंद्रेभ्यएवच ॥२३॥
निर्याणसमये प्राप्ते रामचंद्रयतीश्वराः ।
येरगोळमुपागत्य तत्रस्थानिदमब्रुवन् ॥२९॥
भो धर्मण्णमुखास्सर्वे श्रूयतामस्मदाशयः ॥
विबुधेंद्रोमहांतो स्मन्मठे मुख्याभिमानिनः ॥३०॥

(गुरु कथाक्ल्पतरु)

என்று உதாஹரித்தபின் 35-வது சுலோகத்தின் பிற்பாதியையும் 36-வது சுலோகத்தின் முற்பாதியையும் சேர்த்து, 31-வது சுலோக மென்று ஓர் ரீதியில் ஓர் சுலோகத்தை உதாஹரித்திருக்கிறுர்.

कुलकर्ण्युपनामेत स्मार्तधर्मण्णमंदिरे ।
निक्षिप्य देवमंजूषां निधायोणस्करानपि ॥

ஆனுல், அதே குருகதாகல்பதருவின் அதே 7-வது ஸர்க்கத்தில், மேலே அவரால் உதாஹரிக்காமல் விடப்பட்டிருக்கும் 31, 32, 33, 34, 35ன் பிற்பாதி, ஆகிய சுலோகங்கள் அடியிற்கண்டவாறு காணப் படுகின்றன.

भक्तिश्रद्धादिसयुक्तांः वाक्यार्थेष्वपि कोविदाः ।
विद्यानिधि पुत्रेभ्यस्त आश्रमेह्युसमाः किल ॥३१॥
संस्थानयोग्यानायाताः कालोप्यस्माकमागतः ।
एतेऽपि साधवो योग्याः परं त्वाश्रमतोऽधमाः ॥३२॥
तस्माद्युष्मद्गृहेदेव मंजूषा स्थाप्यते भुवि ।
अस्मान्निर्याणतः पश्चातूषण्मासाभ्यंतरे कृते ॥ ३३ ॥
विबुधेंद्रा आगताश्चेत् सर्वं देयं न संशयः ।
नोचेद्विद्या निधिभ्यो हि सर्वं देयं न संशयः ॥३४॥
एवं विधायमर्यादां येर गोळे गुरूक्षमाः ।
कुलकर्ण्युपना मेतसार्तधर्मण्णमंदिरे ॥३५॥

குருகதையை எழுதியவருக்கு, அதே குருகதாகல்பதருவிலுள்ள மேற்கண்ட சுலோகங்கள் கண்ணுக்கு ஏன் புலப்படாமற்போயிற்றோ தெரியவில்லை.

ஸ்ரீராமச்சந்திர தீர்த்தர் வெகுநாள் ஸ்ரீவிபுதேந்திர தீர்த்தரின் வசதியை எதிர்பார்த்தபின், ஸ்ரீவித்யாநிதி தீர்த்தருக்கு ஆசிரமம் கொடுத்து, ஸ்வாமி பெட்டியை பூமிக்குள் பந்தோபஸ்து செய்துவிட்டு, ஆறுமாதகாலம் கெடுவைத்து, அந்த கெடுக்குள் ஸ்ரீவிபுதேந்திர தீர்த்தர் திரும்பிவிட்டால், ஆசிரம ஜேஷ்டரான ஸ்ரீவிபுதேந்திரருக்கு, இந்த பூமிக்குள் வைக்கப்பட்டிருக்கும் ஸ்வாமி பெட்டியை ஒப்புவித்தபிறகு ஸ்ரீவிபுதேந்திர தீர்த்தர் தம்முடைய நிர்யாண காலத்தில், தம் உத்தராதிமடம் ஸம்ஸ்தானத்தை ஸ்ரீவித்யாநிதி தீர்த்தருக்கே கொடுக்கவேண்டும் என்றும் மற்றவர் யாவரிடமும் ஒப்புவிக்க கூடாதென்றும், இவ்வாறு தம்முடைய ஆக்ஞை ஆகி இருப்பதாய் ஸ்ரீவிபுதேந்திரரிடம் தெரிவிக்க வேண்டும் என்றும், அந்த ஆறுமாத கெடுவுக்குள் ஸ்ரீவிபுதேந்திர தீர்த்தர் எரகோளத்துக்கு வராமல் இருந்தால், ஸ்ரீவித்யாநிதி தீர்த்தரிடமே ஸ்வாமி பெட்டி முதலான உத்தராதிமடம் ஸம்ஸ்தானத்தை ஒப்புவிக்கவேண்டுமென்றும், காலம் கடந்து வந்த ஸ்ரீவிபுதேந்திரருக்கு, ஸ்வதந்திரமான மடத்தை ஸ்தாபிக்க தம்முடைய ஆக்ஞை இல்லை என்றும் அவரிடம் அறிவிக்கவேண்டு

மென்று எரகோள கிராமத்தின் முக்யஸ்தர்களுக்கு ஆக்ஞை யிட்டு பிருந்தாவனம் அடைந்தார். தவிரவும் குருகதையை எழுதி யவர், அந்த நூலில் 114–116 பக்கங்களில் எழுதியிருப்பதாவது :—

"அதற்குள்ளாக எரகோளத்திற்கு உடுபி மடங்களில் ஒன்றுன சீரூர் மடத்தின் ஸன்யாஸிகளான வித்யாநிதி தீர்த்தர் என்றெருவர், தேசசஞ்சாரம் செய்துகொண்டு அங்கே வந்தார். அங்கு உத்தராதிமடம் மஹாஸம்ஸ்தானத்தின் ஸ்ரீமூலராமர் சீதை விக்ரஹங்கள் இருப்பதை தெரிந்துகொண்டு, அவைகளை சிலகாலம் பூஜை செய்யவேண்டுமென்று அவ்வருக்கு ஏற்பட்ட ஆசையின்பேரில், அவ்வூரிலுள்ள அந்த பக்திமான்களை, தன் ஜனத்தைக்கொண்டு வரவழைத்தார். ஸ்ரீராமசந்திர தீர்த்தர் எரகோள ப்ரமுகர்களிடம் உத்தராதிமடம் ஸம்ஸ்தானத்தை ஒப்புவித்து காலகதி அடைந்திருந்தபோதிலும், ஸ்ரீராமச்சந்திரர் இறக்கும் சமயத்தில் அவருக்கு துளுவ ஸன்யாஸிகள் சிஷ்யராய் இருந்தார் என்று சொல்ல எந்த ஆதாரமும் இல்லை. ஆகவே ராம சந்திரர் இறந்தபின், சஞ்சார கிரமத்தில் அவ்வூருக்கு வந்த வித்யாநிதி ஸ்வாமிகள், அந்த கிராமத்தாரிடம் தம்முடைய தீவிர மான ஆசையைச் சொல்லிக்கொண்டு, அதனுல் கிராம ப்ரமுகர் களின் மனதைக் கவர்ந்து சிலகாலம் பூஜித்திருந்து, அந்த மூலராம சீதா விக்ரஹங்களை வெளியே கொண்டுபோய் பூஜித்திருந்தார். உத்தராதிமடம் மஹாஸம்ஸ்தானத்தின் அறிகுறியான அந்த உத்தம விக்ரங்களை யார்தான் சுலபமாய் திருப்பிக்கொடுத்து விடுவார்? ஆதலால் அந்த சுவாமிகள் ராமச்சந்திர தீர்த்தர் காலமாகும்பொழுது, அவருடைய பரிவாரங்களில் இருந்துவந்த அறுபத்தி மூன்றுபேர் சேவைக்காரர்களை ஆசிரயித்து, இந்த விக்ரஹங்களின் பூஜையை தமக்கு கிடைக்கும்படி இவர்கள் கிடைக்கச்செய்ய வேண்டுமென்றும், அதற்கு பிரதி பிரயோஜன மாய் அவர்களுக்கு தம் ஸஞ்சாரத்தில் வரும் வருமானங்களை எல் லாம் கொடுத்துவிடுவதாயும், அந்த வித்யாநிதி ஸ்வாமிகள் வாக்குத் தந்தார். அதன்படியே அவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டது. அந்த ஸேவைக்காரர்களின் உதவியைக்கொண்டு, அந்தஸ்வாமிகள் எரகோளத்திலிருந்து அந்த விக்ரஹங்களை எடுத்துக்கொண்டு வெளி ஊர் சென்றுர். அந்த ஊர் பிரமுகர்கள் இதை அறிந்து அதிகம் பயந்தனர். ஆயினும் ஓர் ஸன்யாஸிக்கு பதில் செய்ய பின்வாங்கி சும்மா இருந்துவிட்டனர். இந்த அறுபத்தி மூன்று பேர்கள்தான் உத்தராதிமடத்தில் சானபோகர்கள் என்று ப்ரசித்

தர்களாயினர். இவர்களை இந்த மடத்தின் ஸ்ரீஸத்யத்யான யதிகள் வெளியே தள்ளிவிட்டார். விபுதேந்திர தீர்த்தர் எரகோளத்திற்கு வந்தபின் அவருக்கு அங்கு நடந்த விஷயங்கள் எல்லாம் தெரிந்தன. ஆயினும் மாஹ ஸ்வாமிகளான விபுதேந்திரருக்கு இதனால் வித்யாநிதிகளிடம் துவேஷம் உண்டாகவில்லை. தமக்கு மூலராமரை பூஜிக்கும் நல்ல யோகம் இல்லை என்று அவர் துக்கப்பட்டார். அவருக்கு, அவருடைய சிஷ்யரின் சிஷ்யர்க்கு இந்த விக்ரஹங்கள் கிடைக்கப்போவதாய் சூசனை ஏற்பட்டது. "சரி ஹரிசித்தம். அதை மீறுவது யாருக்கும் முடியாது என்று சமாதானம் செய்துகொண்டார்," என்று இந்த ரீதியில் இந்நூலை எழுதியவர் எழுதியிருக்கிறார். ஆயினும் இவைகளை ஒவ்வொன்றாக விசாரம் செய்வோம்.

(1) முதலில் ஸ்ரீராமச்சந்திர தீர்த்தர் ஸ்ரீவிபுதேந்திரருக்கு ஆசிரமம் கொடுத்தபின், மற்றொருவருக்கு ஆசிரமம் கொடுத்து, அவருக்கு ஸ்ரீவித்யாநிதி என்று நாமகரணம் செய்தாரா? அல்லது மற்றொருவருக்கும் ஆசிரமம் கொடுக்காமலேயே காலமானரா? என்பதை விசாரம் செய்வோம்.

குருகதா எழுதியவர் பிரமாண நூலாக ஒப்புக்கொண்டு கைக்கொண்டிருக்கும் குருகதாகல்பதரு 7-வது ஸர்க்கத்தில்

जित्वा मायिगणानन्यान्सदैव जयकांक्षिणः ।
गुरुभिर्बहुधाऽऽहूताः अपि नैवागताः पुनः ॥२७॥
तेषां मार्गं प्रतीक्ष्याय रामचंद्रयतीश्वराः ।
विद्यानिधिमुनिभ्यस्ते सन्यासंददुरादरात् ॥२८॥

ஸத்யபோதவிஜயம் என்னும் நூலின் முதல் ஸர்க்கத்தில்

अभावि विद्यानिधिना प्रभाविना सुरामचंद्रार्य भुजांबुरुद्भवा ।
यदीय जिह्वाग्ररसोल्लसद्गिरा सुनर्तकीनर्तन तोषिताबुधाः ॥

ஸ்ரீராமச்சந்திர தீர்த்தர் ஸ்ரீவிபுதேந்திர தீர்த்தருக்கு அநேகம் தடவை சொல்யனுப்பியும் அவர் வராதிருக்கவே, மற்றொருவருக்கு ஆசிரமம் கொடுத்து ஸ்ரீவித்யாநிதி என்று நாமகரணம் செய்தார் என, மேற்கண்ட பிரமாணங்களில் சொல்லப்பட்டிருக்

கிறது. ஆதலால் வித்யாநிதி தீர்த்தர் ராமச்சந்திர தீர்த்தரிடமிருந்து ஆசிரமம் அடையப்பெற்றுர் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்று அந்நூலை எழுதியவர் எழுதியது ஆதாரமற்ற வார்த்தை என்பதே பொருத்தமாகிறது. தவிரவும், உடுபி சீரூர் மடத்தின் வம்சாவளியில் அப்பொழுது வித்யாநிதி ஸ்வாமிகள் என்று பெயருள்ள ஸன்யாஸிகளே தோன்றவில்லை என்று காணப்படுகிறது.

(2) ராமச்சந்திர தீர்த்தரின் நூதன சிஷ்யரான ஸ்ரீ வித்யாநிதி ஸ்வாமிகள், ஸ்ரீ மூல ராமசீதா விக்ரஹங்களை ஜனங்களின் மனதை வசீகரம் செய்துகொண்டதாலாவது பலாத்காரத்தினுலாவது எடுத்துக்கொண்டாரா என்பதையும் விசாரம் செய்வோம். குருகதா கல்பதரு 7வது ஸர்க்கத்தில்

तदा विचार्यते रामचंद्रतीर्थाः हरेःपदं ।
गत्वाभवंश्च षण्मासाः तथैकादशवासराः ॥५१॥

इति ज्ञात्वामुहूर्तं ते विचार्यौचुर्जनाइदम् ।
दास्य ते दैव संस्थानं स्नानार्थं गम्यतामिति ॥५२॥

गतेषु तेषु स्नानार्थं विबुधेंद्रा इहागताः ।
ज्ञात्वा तेषामभिप्रायं सर्वानेताप्रपेदिरे ॥५३॥

इतःपरं कथं कार्यमुभावेतौ समागतौ ।
द्वयोरन्यतरोऽस्माकं शापं दद्यान्नसंशयः ॥५४॥

इमानपि प्रेषयित्वा स्नानार्थं गम्यतामिति ।
पश्चादुपायं कर्तव्यमस्मत्संकटनाशने ॥५५॥

उभावपि यदा स्नात्वाऽऽगच्छेतां राघवेच्छया ।
द्वयोर्विनीयतोर्वाचमस्माभिस्साम पूर्वकम् ॥५६॥

भवन्तौ नीतिशास्त्रज्ञावेककाले समागतौ ।
येषांस्तुत्याप्रसन्नःस्यात् रामस्तैरर्च्यतां ततः ॥५७॥

इत्यालोच्य तथा कर्तुं सर्वे निश्चित्यसंस्थिताः ।
ततस्तन्निष्टहृदयाः स्नात्वा तावप्युपागतौ ॥५८॥

यदा समागतौ तौ तु धर्मण्णस्य गृहंप्रति ।
सर्वैरालोच्य तत्प्रोक्तं ताभ्यामंगीकृतं तथा ॥५९।

तत्रादौ विबुधेंद्रास्तं प्रार्थयन्दिवसत्रयम् ।
उपवासेन पश्चात्तु विद्यानिधिमुनीश्वराः ॥६०॥

श्रीमद्भागवतोक्तैः पंचमस्कंध संस्थितैः ।
गद्यपद्यादिभिः स्तोत्रं चक्रिरे तद्गतमानसाः ॥६१॥

यदृच्छया भवत्तत्र भूविदारणमद्भुतम् ।
दृष्ट्वा विदारितां भूमिं सर्वे ते विस्मितास्तदा ॥६२॥

विद्यानिधिमुनींद्रास्ते महार्हैः समन्विताः ।
सम्बोधयित्वा सर्वानेतान्प्रोचुर्मृदुदया गिरा ॥६३॥

भोधर्मण्णमुखास्सर्वे श्रूयतामस्मदाशयः ।
वयं सन्यासिनो भूमेः खननं नोचितंहि नः ॥ ६४॥

यूयं विदारितां भूमिं खनित्वोपरि संस्थिताम् ।
मृदमुद्धरतक्षिप्रं रामं नेष्यामहेवयम् ॥६५॥

इति तेषां वच श्रुत्वा विलस्योपरि संस्थिताम् ।
मृतमुत्धृत्यदेवस्यं मंजूषां ते निवेदयन् ॥६६॥

ततो गृहीत्वा रघुपं विद्यानिधिमुनीश्वराः ।
स्नात्वा देवार्चनं चक्रु रशेष जनसंसादि ॥६७॥

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த சுலோகங்களின் அபிப்பிராயமாவது:—

ஸ்ரீவிபுதேந்திரர் குறிப்பிட்ட கெடுவுக்குள் வராதிருக்கவும் ஸ்ரீவித்யாநிதி ஸ்வாமிகளுக்கு உத்தராதிமடம் ஸம்ஸ்தானத்தை

ஒப்புவிப்பதாய் எரகோள வாசிகள் தயாராய் இருக்கும்பொழுது அகஸ்மாத்தாய் ஸ்ரீ விபுதேந்திரர் அவ்வூருக்கு வந்து தாக்கே விக்ரஹங்களைக் கொடுக்கவேண்டுமென்று அடம் பிடிக்கவும், "தாங்கள் தம்முடைய குரு சொன்னகாலம் கடந்து வந்திருப்ப தால் தங்களிடம் விக்ரஹங்களை ஒப்புக்கொடுக்கமுடியாமல் இருக் கிறதென்று" அவர்கள் சொல்லியும்கூட, அவர் அடுத்தடுத்து அடம் பிடிக்கவும், ராமசந்திர தீர்த்தரின் சிஷ்யர்களான இரண்டு சிஷ்யர்களுக்கும், அவர்கள் எங்கே சாபம் கொடுத்துவிடுவார் களோ என்று பயந்தனர். அதனால் அந்த கிராமத்தார்கள் "நீங்கள் யதிகளாய் இருக்கிறீர்கள்; ஸ்வாமியை ப்ரார்த்தனை செய்யுங்கள்; உங்களில் யாருடைய பிரார்த்தனைக்கு பகவான் கைக்கு கிட்டு வாரோ அவர்தான் இந்த விக்ரஹங்களை ஆராதிக்கத் தகுதியுள்ள வர்" என்று சொன்னார்கள். அதை இரண்டு ஸ்வாமிகளும் ஒப்புக் கொண்டனர். முதலில் ஸ்ரீ விபுதேந்திரர் மூன்று நாட்கள் உப வாஸத்துடன் ஸ்வாமியை பிரார்த்தித்தார். ஸ்வாமி விக்ரஹங் கள் அவருடைய கைக்கு கிட்டவில்லை. அதற்குமேல் ஸ்ரீவித்யாநிதி ஸ்வாமிகள் ஸ்ரீமத்பாகவதம், பஞ்சமஸ்கந்தத்தின் சூர்ணிகைகளை சொல்லி ஸ்தோத்திரம் செய்யவும், ஸ்வாமி பெட்டி வைக்கப்பட் டிருந்த பூமி இரு பிளவாய் பிளந்தது. அதன்பிறகு ஜனங்கள் பூமியை அகலப் பரித்து, ஸ்வாமி பெட்டியை பூமியிலிருந்து எடுத்து வித்யாநிதி ஸ்வாமிகளிடம் ஒப்புவித்தனர். ஸ்நானம்செய்து வித்யாநிதி சுவாமிகள் ஸ்ரீ மூலராமர், சீதை விக்ரஹங்களையும், ஸ்ரீ திக்விஜயராமரையும், எல்லா எரகோள வாசிகளின் எதிரில், மகத்தான வைபவத்துடன் பூஜித்தார். அதற்குமேல் விபுதேந் திரர் ஹரி சித்தம் இப்படித்தான் இருக்கிறது என்றறிந்து, அவ் வூரிலிருந்து புறப்பட்டுப் போனார்; என்றிவ்வாறு சொல்லப்பட் டிருப்பதால் வித்யாநிதி ஸ்வாமிகள் எனப்படுபவர் சீரூர் மடத்து ஸ்வாமிகளாய் இருந்து, விக்ரகங்களை, எரகோளம் தர்மண்ணை முதலான ப்ரமுகர்களின் மனதை திருப்தி செய்வித்ததாலோ, பலாத்காரத்தாலோ வெளியே எடுத்துப்போனார் என்று ஆகு சரிதை எழுதியவர் எழுதியது கேவலம் ராகத்வேஷங்களால் எழுதிய கட்டுக் கதையே அல்லாமல் வேறு அல்ல.

(3) மற்றும் ஸ்ரீராமசந்திர தீர்த்தரின் காலத்தில் உத்த ராதி மடத்துக்கு ஐசுவரியம் யாதும் இருந்ததில்லை. உத்தராதி மடம் ஸ்வாமிகளிடம் படித்துவந்த சிஷ்யர்கள்தான் எவ்வகை பிரதிபிரயோஜனமில்லாமல், குருபக்தியால் அவருக்கு ஸேவை

காரர்களாய் இருந்துவந்தனரேயன்றி, பிரதிபிரயோஜனம் பெற்று சேவகம் செய்யும் திட்டம் ஸ்ரீராமசந்திர தீர்த்தரின் காலத்தில் இல்லை. பிரதிபிரயோஜனத்தைப் பெற்று சேவகம் செய்யும் நபர்களின் விவஸ்தை, ஸ்ரீராமசந்திரதீர்த்தருக்கு நான்காவது பரம்பரையான ஸ்ரீரகூத்தமஸ்வாமிகளின் காலத்தில்தான். அப்பொழுதும்கூட சில சேவக்கார ஜனங்கள்தான் இருந்தனரே அன்றி அறுபத்திமூன்று ஜனங்கள் இருந்திருக்கவில்லை, அந்த காலத்திற்கு பின்பு, போகப்போக, உத்தராதி மடத்தின் ஐசுவரியம் வளர்ந்ததற்கு தகுந்தபடி, அறுபத்திமூன்று சேவக்காரர்கள் ஏற்பட்டனர். அவர்கள் சானுபோகர்கள் என்று பிரசித்தர்களாயினர். இந்த விஷயம் குருகதாகல்பதருவின் 12வது ஸர்க்கத்தில் அடியிற்கண்டவாறு சொல்லப்பட்டிருக்கிறது.

एवं गुरुप्रसादेनावाप्य ज्ञानमद्भुतम् ।
रघूत्तममुनिश्रेष्टाः कृतकृत्याबभूविरे ॥३३॥

अंसे विदायदेवार्चां दंडहस्ताः गुरूत्तमाः ।
पद्भ्यामेव चरं तस्ते चक्रुः दिग्विजयं तदा ॥३४॥

तावत्कालंतु श्रीपादैः नित्यं सिद्धान्न भोजनम् ।
कृतं भिक्षान्नमानीय क्वचिद्भुक्तं पुरातनैः ॥३५॥

ततो गुरूणां वचनं स्मृत्वादळपते स्तदा ।
उन्मत्त त्वं च मनसा विचार्य गुरुशेखराः ॥३६॥

क्रमेण शिबिकां नानावाद्य वैभवपूर्वकम् ।
सम्पाद्यवैभवैस्सांकं चक्रुर्दिग्विजयं भुवि ॥३७॥

ततस्सेवा जनान्चक्रुः पाचकान्परिवेषकान् ।
द्वारपालौ जलधर देवसेव जनास्तथा ॥३८

இதனால் ஸ்ரீரகூத்தமஸ்வாமிகளுக்கு ஓர் தளபதியால் அவமானம் ஏற்பட்டதால் அவருடைய குரு ஆசித்தபடி, தம் உத்தராதி மடத்திற்கு ஐசுவரியத்தையும் ஸேவா ஜனங்களின் பத்ததியையும் அவர் ஏற்படுத்தினர் என்று ஏற்படுகிறது. ஸ்ரீரகூத்தமஸ்வாமி

களின் காலத்தில்தான் ஸேவைக்காரர்களின் திட்டம் ஏற்பட்டது என்பதை உத்தராதி மடத்தின் சானுபோகர்களின் வியாஜ்யத்தில், சானுபோகர்களின் ஸ்டேட்மெண்டிலிருந்தே காணப்படலாம். ஆகவே ஸ்ரீவித்யாநிதி ஸ்வாமிகள் அறுபத்திமூன்று ஜனங்களுக்கு ஆசைகாட்டி ஸ்வாமி விக்ரஹங்களைக் கொண்டுபோனார் என்பது குருகதை எழுதியவரின் பேச்சு உண்மையற்ற கேவலப் பேச்சு.

ஸ்ரீவித்யாநிதிஸ்வாமிகள், ஸ்வாமிப்ரதிமைகளைக் கொண்டுபோனதை, ஸ்ரீவிபுதேந்திரர் கேட்டு ஹரிசித்தம் என்று சமாதானம் செய்துகொண்டார் என்று குருசரிதை எழுதியவர் எழுதியது சரி அன்று, ஏனெனில் குருகதாகல்பதருவில் 8வது ஸர்க்கத்தில் சொல்லப்பட்டிருப்பதாவது :—

गतेषु तेसु पश्चात् श्री विद्यानिधिमुनीश्वराः ।
इतस्त तस्संचरंतः हिदरी कोटमाययुः ॥५॥

तस्मिन्पूरवरेतेपि विबुधेंद्रमुनीश्वराः ।
आगत्यकलहं चक्रुः देवतार्चन कांक्षया ॥६॥

इति लोकमुखैः श्रुत्वा शेषवार्तां पुरेश्वराः ।
नचाग्न्ये कलहः कार्यः इति दूतैर शिक्षयन् ॥७॥

परस्परं लेखयित्वा पत्रं कलहशान्तये ।
श्री विद्यानिधिमुनेरेव संस्थानं चेत्यघोषयन् ॥८॥

बध्वेवमादि श्लोकांस्ते प्रोचुर्वैजन सम्सदि ।
ताम्रपुत्तलिकाचेयं मोक्षं दास्यति किं मम ॥२२॥

हृत्पद्म संस्थितो लक्ष्मीरमणः करुणानिधिः ।
स एव मोक्षं मे दद्यादित्युक्त्वा निर्गताः पुरात् ॥२३॥

பிதரிகோடி என்னும் ஊரில் ஸ்ரீவித்யாநிதி ஸ்வாமிகளுடன், ஸ்ரீவிபுதேந்திரர் ஸ்ரீமூலராமர் விஷயமாய் கலகம் செய்யவும், அங்கிருந்த மகம்மதிய அரசன் அவருடைய கலகத்தை சமாதானம் செய்து, ஸ்ரீவித்யாநிதி ஸ்வாமிகளுக்குத்தான் உத்தராதி மடம்

ஸம்ஸ்தானம் சேர்ந்தது என்று பிரசித்தம் செய்தான். அதற்கு மேல் ஸ்ரீவிபுதேந்திரர் சந்தோஷமில்லாமல் "தாம்பிர பொம்மை எனக்கு மோக்ஷத்தைத் தரக்கூடியதா? ஹ்ருதய கமல நிவாஸி யான லக்ஷ்மிநாராயணன்தான் மோக்ஷத்தை அளிப்பார்" என்று மெப்புப் பேச்சு பேசிவிட்டு அவ்வூரைவிட்டு பிரயாணமானார். ஆகவே ப்ரம்மகரார்ச்சிதமான விக்ரஹங்களை யாராவது எப்போதாவது ஸுலபமாய்க் கொடுத்துவிடுவாரா? என்று அந்நூலாசிரியர் சொன்னபடி ஸ்ரீவிபுதேந்திரர்தான் கலகம் செய்தவரே அன்றி ஹரிசித்தம் என்று அவர் சமாதானம் கொள்ளவில்லை.

குருசரிதையை எழுதியவர் அந்நூலின் 128வது பக்கத்தில் ஸ்ரீவிபுதேந்திரருக்கு ப்ரசிஷ்யரான ஸ்ரீரகுநந்தன தீர்த்தர், சந்திர பட்டன் என்னும் பிராம்மணனால் உத்தராதி மடத்திலிருந்த ஸ்ரீமூலராமர் ப்ரதிமை ஒன்றை திருடச்செய்து வரவழைத்துக் கொண்டார் என்று எழுதி இருப்பதைக்கொண்டு, 116வது பக்கத்தில் ஸ்ரீவிபுதேந்திரருக்கு தங்கள் பரமசிஷ்யருக்கு அந்த விக்ரஹங்கள் கிடைக்கப்போகின்றனவென்று சூசனை ஆகிறது என்று ப்ரதிமை சப்தத்திற்கு இங்கு பஹுவசனம் ப்ரயோகம் செய்திருப்பது தவறு என வேண்டும். ஏனெனில் ஸ்ரீவிபுதேந்திரருக்கு சூசனை ஆனதாய் சொல்லப்பட்டிருப்பது இரண்டு விக்ரஹங்கள் கிடைக்கும் என்பது ரகுநந்தனருக்கு திருட்டு மூலமாய் கிடைத்ததாய் சொல்லப்படுவது ஒரே ப்ரதிமைதான். இதனால் ஸ்ரீவிபுதேந்திரருக்கு ஏற்பட்ட சூசனை பொய்யான சூசனை என்றே அந்த நூல் எழுதியவரே ஒப்புக்கொண்டதாய் ஆயிற்று. மற்றும் அந்நூலாசிரியரின் அபிப்ராயப்படி எரகோள கிராமத்தினர் கனவாயின், கீழ் நாட்டில் இருப்பவர்களான ஸ்ரீவித்யாநிதி தீர்த்தருக்கு இதர மடத்தினர் தொடக்கூடாததாய் இருக்கும் விக்ரஹங்களை கொடுத்திருப்பார்களா? இந்த யோசனை அவர்களின் மனதிற்கும் வந்திருக்ககூடுமல்லவா? சதுர்முகனின் கையால் பூஜிக்கப்பட்டதாயும் வாயுபகவானின் மூன்று அவதாரங்களாலும் பூஜிக்கப்பட்டதாயும் எந்த விக்ரஹங்கள் இல்லாமற்போனால் உத்தராதிமடம் ஸ்ரீமத்வாசாரியாரின் மூலமடம் என்று ஏற்படாதோ அப்பேர்ப்பட்டதாயுமுள்ள ஸ்ரீமூலராமர் சீதா விக்ரஹங்களையா உடுப்பி வித்யாநிதி ஸ்வாமிகளுக்கு எரகோள வாசிகள் ஒப்பிவித்தனர்? ஸ்ரீமத்வாசாரியாரின் பீடத்துக்கு நாங்கள் துரோஹம் செய்தவர்களாய் ஆவோம் என்பதையாவது சாபானுக்ரஹ சக்தி படைத்த ஸ்ரீவிபுதேந்திருக்கு இச்செய்தி தெரிந்தால், எங்கள் கதி என்ன ஆகும்

என்பதையாவது யோசிக்காமல், ஸ்ரீவித்யாநிதி ஸ்வாமிகளுக்கு ஸ்வாமி விக்ரஹங்களைக் கொடுத்தார்களென்பது அந்த நூலாசிரியரின் கற்பனைப் பேச்சே ஆகும். எரகோள வாசிகள் ஒருக்கால் பூஜார்த்தமாய் ஸ்வாமி விக்ரஹங்களை வித்யாநிதி ஸ்வாமிகளுக்கு கொடுத்திருந்ததாய் கக்ஷிக்கு வைத்துக்கொண்டாலும் அந்த ஸ்வாமிகள் அவ்வூரை விட்டுப்போகும்பொழுது அவரிடம் பூஜார்த்தமாய் கொடுக்கப்பட்டிருந்த விக்ரஹங்களை, பலாத்காரமாய் வெளியே கொண்டுபோவது அநியாயம் என்று தெரிந்து கொண்டு அவர் பலாத்காரமாய் கொண்டுபோகும்பொழுது அவரிடமிருந்து தாங்களும் பலாத்காரமாய் அந்த விக்ரஹங்களை எடுத்துக்கொள்வது அநியாயமாகாது என்று அவர்களுக்கு எண்ணம் உதிக்காமற்போய் அவர் ஸன்யாஸியாய் இருக்கிறார் என்ற காரணத்தால் மட்டில், முன்னே தமக்கு ஏற்[illegible] அனர்த்த பரம்பரைகளை எண்ணுமலேயே அந்த விக்ரஹங்களை அவரிடம் கொடுத்துவிட்டு எரகோள வாசிகள் சும்மா விட்டுவிட்டனர் என்று சொல்வது நகைக்கத் தகுந்ததே ஆகும்.

குரு சரிதை *120, 121* பக்கங்களில் மடத்தின் பெயர் என்ற தலைப்பின்கீழ் மடங்களுக்கு பெயர் ஏற்பட்ட விஷயத்தில் சிறிது விசாரம் செய்யத் தகுந்ததாய் இருக்கிறது என்று கீழ்கண்டபடி அந்நூலாசிரியர் வர்ணனை செய்து வருகிறார். "தற்போது வெவ்வேறு மடங்களின் பெயர்கள் இருவகையாய் இருக்கின்றன. ஒன்று அந்தந்த மடத்தின் மூல புருஷர் அல்லது ப்ரசித்தர்களான யதீசுவரர்கள் இவர்களின் பெயரில் இருக்கிறது. மற்றொன்று அந்தந்த மடத்தின் மூலஸ்தலங்களின் பெயரில் இருக்கிறது ஸ்ரீமத்வாசாரியாரின் சிஷ்யர்களால் ஸ்தாபிக்கப்பட்ட மடங்களும் ஸ்ரீவியாஸராஜமடமும் முக்ய ஸம்ஸ்தானமான ஸ்ரீராகவேந்திரஸ்வாமி மடமும் மூல புருஷர் அல்லது அவதார புருஷர்கள் இவர்களின் பெயரால் இருப்பது வெகுப்ரசித்தமாய் இருக்கிறது. ஸ்ரீ உத்தராதி மடத்தின் பெயர் மட்டில் வேறு ரீதியில் இருந்து வருகிறது. அதனால் இந்த மடம்தான் ஸ்ரீமத்வாசாரியாரின் மூல ஸம்ஸ்தானம் என்று ஸாதிப்பது சரி அன்று. இதற்கு தக்க ஆதாரம் இல்லை. யுக்திக்கும் பொருத்தமாய் இல்லை. ஸ்ரீமத்வாசாரியாரின் சிஷ்யரான ஸ்ரீ பத்மநாம தீர்த்தர் முதலானவர்கள். உத்தர தேசத்தாரானதால் முக்ய மடத்திற்கு ஸ்ரீ உத்தராதி மடம் என்று பெயர் ஏற்பட்டதாய் அம் மடத்தார்கள் முக்யமாய் வாதிக்கின்றனர். அப்படியானால் இந்த பெயர் முக்ய ஸம்ஸ்தானம் என்பதை சூசிப்பதில்லை. தவிரவும் உத்தரதேசத்தாரான ஸ்ரீபத்மநாபதீர்த்தர்

முதலானவர்கள் தம் ஸம்ஸ்தானங்களை உத்தராதிமடம் என்று சொல்லிக்கொண்டனர் என்பது பொருத்தமாக இல்லை. இயற்கைக்கு விரோதமானது. ஸ்ரீமத்வாசாரியாரின் ஸம்ஸ்தானங்களுக்கு இத்தகைய பெயரின் ப்ரசித்தி இல்லை. ஆதலால் ஸ்ரீராமசந்திர தீர்த்தரின் காலம் ஆனபின்பு, வித்யாநிதிஸ்வாமிகளின் காலத்தில், வேறு கிளை பிரிந்தபின், இந்த பரம்பரைக்கு உத்தராதி மடம் என்ற பெயர் வந்திருக்கவேண்டும். இதற்கு மற்றொரு காரணத்தையும் ஊகிக்கலாம். உத்தராதி மடத்துக்கு மூல புருஷரான ஸ்ரீவித்யாநிதி தீர்த்தர் துளுவராயிருப்பதால், அவர் ஆரம்பித்துவைத்த மடத்துக்கு உத்தராதி மடம் என்று அவர் அழைத்திருப்பது சகஜமே ஆகும். அப்படிக்கில்லாமலிருந்தால், ஸ்ரீ விபுதேந்திரர், ஸ்ரீவிஜயீந்திரர், ஸ்ரீராகவேந்திரர், ஸ்ரீஸுமதீந்திரர், ஸ்ரீசந்திரிகாசாரியார் என்றிவ்வாறுள்ள சகபுருஷர்களின் பெயர் இந்த உத்தராதி மடத்துக்குவராமலிருப்பதால், இது அந்த காலம் முதல் ஸ்ரீஉத்தராதிமடம் என்றே வழங்கிவருவதாகும். ஆதலால் முக்ய ஸம்ஸ்தானமானதால் அதற்கு ஸ்ரீ உத்தராதி மடம் என்று சொல்லும் வாதம் நில்லாது. இது அவ்வளவு உத்தமமாய் இல்லை; என்றிவ்வாறு அந்நூலை எழுதியவர் எழுதி இருக்கிறார். இதை விமரிசை செய்வோம்.

उत्तरो गोपति:गोप्ता என்று விஷ்ணுஸஹஸ்ரநாம ஸ்தோத்திரமும் ज्योतिष्पश्यन्त उत्तरं என்று சாங்தோக்ய உபநிஷத்தும், उत्तरं ज्योतिः परं ज्योतिरनादे: केशवस्य यन என்று சாங்தோக்ய பாஷியமும் என்றிவ்வாறு பிரமாணங்கள் இருப்பதைக் கொண்டு உத்தர: என்றால் பகவத்ரூபம் என்று அர்த்தம். அல்லது नामैकदेशेन नाम ग्रहणं என்னும் நியாயத்தின்படி, உத்தர: என்றால் உத்தர ஜ்யோதியான ஹம்ஸ நாமக பரமாத்மா என்று அர்த்தம். ஆக उत्तर: ஹம்ஸநாமக பரமாத்மாவே आदि: ஆதியாகவுள்ள மடம் उत्तरादि मठ என்று ஆகிறது, (2) அல்லது संवत्सरस्तु भगवान् वागीरावयनास्ति तत् என்று சாங்தோக்ய பாஷ்யத்தில் சொன்னபடி உத்தராயணகாலத்தைச் சொல்லும் உத்தர சப்தம், அபிமானி அதிகரண நியாயத்தின்படி, மிருத் அப்ரவீத் மண் பேசியது என்று சொல்லுவதில், மண் என்பதற்கு மண்ணின் அபிமானி தேவதையை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று இருப்பதைக்கொண்டு உத்தராயணத்தின் அபிமானியான முக்ய ப்ராணரைச் சொல்வதாய் ஏற்படுகிறது. மற்றும் தத்வப்ரகாசிகா நான்காவது அத்தியாயம் இரண்டாவது பாதத்தில் अत्र प्राणपदेन चतुर्मुख: முக்யப்ராணரைச் சொல்லும் சப்தம் சதுர்முகனைச் சொல்

வதாகும் என்று சொல்லப்பட்டிருக்கிறபடி இங்கு முக்யப்ராணரை சொல்லும் உத்தர சப்தத்திற்கு, சதுர்முக ப்ரம்மா என்று அர்த்தம் செய்யவேண்டியதாகும். ஆதி; என்றால் ஜகத்காரணனுயுள்ள நாராயணனின் அவதாரமான மூல ராமர். उत्तरेण पूजेत. —उत्तरादिः என்று மத்யமபதலோ எபஸமாஸம் यदधीना यस्य सत्ता तत्तदित्येव भण्यते என்னும் ரீதிப்படி उत्तरादश्चासौ मठश्च என்று விக்ரஹம் செய்யப்பட்டால் எந்த மடத்திற்கு சதுர்முக ப்ரம்மாவால் பூஜிக்கப்பட்ட ஸ்ரீ மூல ராமரால் ப்ரதிஷ்டை, கீர்த்தி, வந்திருக்கிறதோ, அந்த மடம்தான் उत्तरादि मठः என்று ஸ்பஷ்டமாகிறது.

(3) अन्ते सिद्धस्तु सिद्धान्तः मध्वस्यागम एवहि ।
अस्मादुत्तरपक्षोऽन्यो यस्मान्नाद्यापि दृश्यते ॥

என்று யுக்திமல்லிகையில் சொன்னபடி, உத்தரமாகிய துவைத சித்தாந்தத்திற்கு ஆதி:, காரணமான மடம் உத்தராதி மடம் (4) உத்தர:, த்வைத சித்தாந்தமே ஆதி:, ப்ரதானமாய் உள்ள மட:, மடம் உத்தராதி மடம் என்றால் ஸ்ரீமத்வ சித்தாந்த ப்ரசார காரியத்திற்காக, எந்த மடத்தின் அன்னத்தின் ஒவ்வொரு பருக்கையும், த்ரவியத்தின் ஒவ்வொரு செம்புக் காசும் சிலவழிக்கப்படுகிறதோ, அந்த மடம் உத்தராதி மடம். இதனுல் உத்தராதி மடத்தில் ஸுதாதி ஸச்சாஸ்திர ப்ரவசனம் இன்னமும் அவிச்சன்னமாய் பண்டைகாலம் முதல் தொடர்ந்து நடைபெற்று வருவதால், த்வைத சித்தாந்த ப்ரதிஷ்டாபன காரியம் உத்தராதி மடத்தின் அஸாதாரண குணம் என்று ப்ரசித்தமாய் இருக்கிறது. (5) ப்ராசீனர்களான பரதீர்த்தாதிகள் பரந்த நோக்கத்தால் சம்பூர்ண உத்தர தேசத்தையே கேந்த்ரஸ்தானமாக நடுநாயக ப்ரசாரக ஸ்தலமாகக் கொண்டிருந்ததால், இந்த மடம் உத்தராதி மடம் என்று ப்ரசித்தமாய் இருக்கிறது. ஆகவே ஹம்ஸநாமக பரமாத்மா மற்றும் சதுர்முக ப்ரம்மா மற்றும் ஸ்ரீமத்வாசாரியார் இவர்களின் பெயரால் ப்ரசித்தமான உத்தராதி மடத்திற்கு, ஸ்ரீ ராகவேந்திரஸ்வாமி மடத்தைப்போல், மூலபுருஷரின் பெயராவது, அவதார புருஷரின் பெயராவது இல்லை என்று குருசரிதையை எழுதியது ப்ராந்திமூலகம்தான். இந்த விஷயத்தில் மைசூர் கஜெட்டியர், வாலியம் ஒன்று, 1927வது வருஷம் எடிஷன், பாகம் 8, பக்கங்கள் 221—322ல் அடியிற்கண்ட வாக்கியங்களில் இதே ரீதியாகத்தான் அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது.

Madhva Mutts

It is not intended to give here complete account of the several Madhva Mutts that were founded by Madvacharya. Only those which have directly to do with Mysore or have its head-quarters here, will be considered. The Uttaradi Mutt (the original North Mutt, because it was presided over by men drawn from the North or Uttaradesh) is the prime pontifical seat of Madvacharya. In the time of Ramachandra Theerth of Uttaradi Mutt, Vibhudendra a disciple of his, founded the Poorvadi, Raghavendra Swami or Sumateendra Mutt.

தவிறவும், சகபுருஷர்களின் விஷயத்தை விமரிசிப்போம். அந்தந்த காலத்தில், உத்தராதிமடம் ஸ்வாமிகளின் பரம்பரையில், அவதாரம் செய்தவர்களாயுள்ள பாவபோதகாரர்களான ஸ்ரீரகூத்தமஸ்வாமிகள் என்ன, வாக்யார்த்த சந்திரிகாகாரரான ஸ்ரீவிதயாதிக ஸ்வாமிகள் என்ன, பஞ்சாபி நவங்களான (1) அபிநவகதா (2) அபிநவ தாண்டவ (3) அபிநவாம்ருத (4) அபிநவ சந்திரிகா (5) ஸத்யாபிநவதீர்த்தர் என்பவைகளின் கர்ததாவான ஸ்ரீஸத்யநாத தீர்த்தர் என்ன, (இவர் ஸ்ரீ ஆனெப்பாசாரியாரை, ஸ்ரீவியாஸராஜர் இயற்றிய வ்யாஸ த்ரயங்களில் சொன்ன விஷயத்தைச் சொல்லாமல், வாக்யார்த்தம் செய்து தோற்கடித்த மஹான்) ஓர் மகம்மதிய அரசனுக்கு, நடுராத்திரியில் சூரியனைக் காண்பித்த ஸ்ரீஸத்யபோத தீர்த்தர் என்ன, பெனுகொண்டா அரசனின் எதிரில அக்னியில் தம்முடைய கௌபீனத்தைப்போட்டும், அது தஹிக்கப்படாமல் இருந்ததைக்கொண்டு, தம் தபோமஹிமையைக் காட்டிய ஸ்ரீவேதவ்யாஸ தீர்த்தர் என்ன, கங்கையை நேரில் ப்ரத்யக்ஷமாக்கிக்கொண்ட ஸ்ரீஸத்யஸங்கல்பர் என்ன, மற்றும் அந்தப்படியே இருந்த ஸ்ரீஸத்யதர்மர் என்ன, புனர்விவாகத்தை கண்டனம் செய்த ஸ்ரீஸத்யவீரர் என்ன, உடுபியில் ரதாரூடராய் இருந்த ஸ்ரீகிருஷ்ணர் தன்னை யார் தரிசிக்க வரும் வரையில், எப்பாடுபட்டும முனனுடி ஓர் அடிகூட நகரச்செய்ய முடியவில்லையோ, அப்போபபட்டவரான, சமீபகாலத்தில் இருந்த பரமவிரக்த சிகாமணி ஸ்ரீஸத்யக்ஞானர் என்ன, ஆஸேது ஹிமாசலம்வரை, பரமத கண்டனம் பூர்வமாய் ஸ்வமத ஸ்தாபனம் செய்தவரும், காசியிலேயும்

த்வைதவிஜய துந்துபியை முழங்கியவரும், மற்றும் ஸ்ரீவியாஸ ராஜர் இயற்றிய சந்திரிகையையும், ஸ்ரீராகவேந்திரர் இயற்றிய ப்ரகாசத்தையும் கண்டனம் செய்துள்ள சந்திரிகா கண்டனம் என்னும் நூலை அக்ஷரவாரியாய் கண்டனம் செய்து, சந்திரிகா மண்டனம் என்னும் நூலை இயற்றியவரும், மூன்று மடத்தார்களாலும் அபிநவ ஆனந்த தீர்த்தர் என்று அழைக்கப்பட்டவருமான, சமீப காலத்திய, மகத்தான கீர்த்திவாய்ந்த. ஸ்ரீஸத்ய த்யானதீர்த்த ஸ்ரீபாதாள் என்ன, ஆக இவ்வாறு ஸ்ரீமத்வாசாரியார் முதற் கொண்டு பிரதி ஒவ்வொரு ஸ்வாமிகளும், சகபுருஷர்களாய் இருந்து வந்ததால், அந்தந்த காலத்தில் அந்தந்த மஹனீயர்களின் பெயரைக் கொண்டு, இந்த உத்தராதிமடம் அழைக்கப்பட்டு, அவ்வாறு ப்ரசித்தமாய் இருந்துவந்ததை, அந்தந்த மகாபுருஷர்கள் சம்பாதித்த ஜாகிர் மான்யங்களின் ரிகார்டுகளைப் பார்வையிட்டுத் தெரிந்துகொள்ளலாம். ஆயினும் உத்தராதி மடம் என்னும் பெயர் வைதிகப் பெயர். எல்லாத்துக்கும் அன்வயிக்கச் செய்யும். அர்த்தகர்பிதமானதால், அது முக்யார்த்தத்தை அறிவிக்கிறது. அந்த காரணத்தால் உத்தராதி மடம் என்றே ப்ரசித்தி வந்திருப்பது இயற்கையாகவே இருந்து வருகிறது. நூநசரிதை எழுதியவரின் அபிப்ராயத்தின்படி ஸ்ரீவித்யாநிதி ஸ்வாமிகளின் காலம் முதற் கொண்டு இந்த மடத்துக்கு உத்தராதிமடம் என்னும் பெயர் வந்திருந்தால், அவருடைய குருவான ஸ்ரீராமசந்திர தீர்த்தரின் காலத்தில் இந்த மடத்துக்கு உத்தராதிமடம் என்ற பெயர் இல்லாமல், வேறு பெயர்தான் இருந்திருக்கவேண்டும். மூலராமரை எடுத்துக்கொண்டு தம் மடமே மூல மடம் என்று சொன்ன அந்த ஸ்ரீவித்யாநிதிஸ்வாமிகள், மூலமடத்துக்கு இருந்த அந்த வேறான பெயரை விட்டுவிட முடிந்திருக்காது. ஸ்ரீராகவேந்திரஸ்வாமி மடம்தான் அந்த மூலராமரைக்கொண்டு, மூலமடம் என்றாகி விட்டதாய் இருக்கும்பக்ஷத்தில் ஸ்ரீராமச்சந்திர தீர்த்தரின் காலத்தில் இருந்த அந்த மூலமடத்தின் பெயரை, இந்த மடத்தாராகிலும் கைவிட காரணமென்ன? ஸ்ரீராகவேந்திரர் ப்ரசித்தரானதால் மூலமடத்திற்கு அவருடைய பெயர் வந்தது என்று சொல்வது முடியாது. ஸ்ரீராகவேந்திரரை விடவும் உத்தமராய் ஸ்ரீஜயதீர்த்தர் இருந்திருக்கிறார். உத்தராதிமடம் மூல மடமாய் இல்லாத பக்ஷத்தில் ஸ்ரீமத்வாசாரியாரின் சாக்ஷாத் சிஷ்யரான ஸ்ரீபத்மநாப தீர்த்தர் முதல் ஸ்ரீராமச்சந்திர தீர்த்தர் வரையிலுள்ள எல்லா ஸ்வாமிகளின் ப்ருந்தாவனங்களும் உத்தராதி மடத்தின் சுவாதீனத்தில் இருந்து வருவதற்கு காரணமென்ன? விக்ரஹங்களை

மட்டில் எடுத்துக்கொண்டவராய்ச் சொல்லப்படும் ஸ்ரீவித்யாநிதி ஸ்வாமிகள் மேற்கண்ட ப்ருந்தாவனங்களின் மீதுள்ள ஆதிக்கத்தை அபகரித்தார் என்று எந்த நூலிலும் சொல்லப்படவில்லை. மூலமடமாய் இல்லாததாய், மூலராமர் இல்லாததாய் இருக்கும் ஸ்ரீஉத்தராதிமடத்துக்கு ராஜர்களும் மகாராஜர்களும் இதர மடங்களைவிட அத்யந்தம் அதிகமாய் ஜாகிர் மான்யங்கள், பூஜாஸாமக்ரிகள் முதலானவைகளை ஏன் கொடுத்தார்களோ என்று தெரியாமல் இருக்கிறது, ஜாகிர்கள் அநேகம் ஸ்ரீமூலராமரின் பெயரிலேயே இருந்துவருகின்றன. ஆதலால் அந்நூலாசிரியரின் அபிப்ராயத்தின்படிக்கே பார்த்தால், ஸ்ரீவியாஸராஜ மடம் கிளைமடம் (சாதா மடம்) ஆனதால், அந்த மடத்தில் ஸ்ரீவியாஸராஜர் முக்யராய் இருந்ததின் நிமித்தம், அந்த மடம் ஸ்ரீவியாஸராஜ மடம் என்று எப்படி ப்ரசித்தமாய் இருக்கிறதோ, அந்தப்படியேதான் ஸ்ரீராகவேந்திரஸ்வாமி மடம் கிளைமடமாதலால், இந்த மடத்தில் ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகள் ப்ரசித்தமாய் இருந்ததின் நிமித்தம், ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள் மடம் என்று ப்ரசித்தமாய் இருக்கிறது என்றால் பாக்கி இருப்பது ஸ்ரீ உத்தராதி மடம் மூலமடம் என்று சித்தமாகிவிட்டதாய் ஏற்படுகிறது. இந்த விஷயத்தில் ஸ்ரீஸத்யபோத விஜயம் 9வது ஸர்க்கம் 7வது சுலோகம் ஆதாரமாய் இருக்கிறது.

संस्थानानि त्रीणि माध्वेष्विहोर्व्यां लोकेष्वष्टारूप्यपीठालयेतु ।
तेषां मध्ये यद्वरिष्ठं तदाशो यः श्रीरङ्गे सत्यधीस्सोधुनास्ति ॥

இந்த ஸத்யபோதவிஜயம் என்னும் காவ்யம் அச்சமயம் இருந்த கண்டேராவ் என்னும் மந்திரியின் ஆராய்ச்சியின் பேரில் எழுதப்பட்டதால் இந்நூல் பிரமாணமாய் இருக்கிறது. மற்றும், இதர மதாசாரியர்களுக்கு மோக்ஷ ஸாதனமான சாஸ்திரத்திரத்தைச் செய்தவர்கள் (ஆனந்த தீர்த்தர்) என்று பெயர் இல்லாதிருக்கையில், ஆனந்த தீர்த்தர், மத்வர் என்று எமது ஆசாரியாளுக்கு பெயர்கள் இருப்பது, இவர் மதஸ்தாபகர் என்பதை சூசிக்கிறதில்லை என்று யாராகிலும் சொல்லலாமா? அஸாதாரணமான இந்த பெயர் இதராளுக்கு வருவது எப்படி முடியும்? இதைப்போலத்தான் வைதிகப்பெயரான, உத்தராதி மடத்தின் எல்லா ஸ்வாமிகளுக்கும் அன்வயிக்கும்படியான, மூலமடம் என்று சூசிப்பதான, அஸாதாரணமான, உத்தராதி மடம் என்னும் பெயர், இதர மடங்களுக்கு இல்லாமற்போயிருப்பது உத்தராதி மடம் தான் சிரேஷ்டம் என்று வழங்கி வருவதற்கு பூஷணமே அன்றி.

தூஷணம் ஆகமாட்டாது. இந்த ரீதியில் அநேக ப்ரமாணங்களால் உத்தராதி மடம் என்னும் பதம் மூலமடம் என்பதை சூசனை செய்து கொண்டிருக்கையில், உத்தராதி மடம் என்னும் பெயர் முக்ய ஸம்ஸ்தானம் என்பதை சூசிப்பதில்லை என்று, எந்த ஆதாரத்தையும் காட்டாமல், எழுதியிருப்பது, ஓர் நூலின் ஆசிரியர் என்று சொல்லிக்கொள்பவரின் கௌரவத்துக்கு பொருத்தமாய் இல்லை. இதர மடங்களுக்கு இல்லாமல் இருக்கும் சம்சயத்திற்கு ஆஸ்பதமாய் இருக்கும் உத்தராதி மடம் என்னும் பெயரை, ஸ்ரீவித்யாநிதி ஸ்வாமிகளாகிலும், ஏனோ வைத்துக்கொண்டார் என்று அறியப்படமுடியாததாய் இருக்கிறது.

स वादी मूलदैत्यो वा

என்று யுக்திமல்லிகையில் சொல்லப்பட்டிருக்கிறபடி துரியோதனனுடைய மதத்தை நிரூபித்துச் சொல்லும் பரமத பாஷியங்களை கண்டனம் செய்த ஸ்ரீமத்வாசாரியார், துர்வாதியை ஜயித்த பீமசேனர் என்று சொல்லப்பட்டிருக்கிறபடி, அப்பேர்ப்பட்ட துர்வாதிகளின் அனுயாயிகளை பராஜயப்படுத்துவது எந்த உத்தராதி மடத்தில் விச்சேதம் இல்லாமல் தொடர்ந்து இன்று வரையில் நடந்துவருகிறதோ அந்த மடம் சாகா ம்ருகத்தின் (ஹனுமாரின்) மடம், சாகா ம்ருகம் மடம், ஆகுமே அல்லாது சாகா மடம் அல்ல. ஸ்ரீமுஷ்ணத்திலிருந்து வரும் ஸ்ரீவராஹப்பெருமாளை ஸ்ரீமத்வாசாரியார் காலம் முதல் தம் மடத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் பூஜை செய்யவேண்டுமென்ற மரியாதை உத்தராதி மடத்துக்குத்தான் காட்டப்படவேண்டும் என்ற ரிகார்டையும், உடுபியில் இருக்கும் ஸ்ரீகிருஷ்ணனை உத்தராதி மடத்தார், அவருடைய எதிரில் இருந்து பூஜை செய்யவேண்டும் என்றும், ஸ்ரீவியாஸராஜ மடத்தாரும் ஸ்ரீராகவேந்திரஸ்வாமி மடத்தாரும் எடபலத்தில் என்றால், இடது புறத்திலும் வலது புறத்திலும் பூஜை செய்யவேண்டுமென்ற ரிகார்டையும், திருப்பதியில் இதர மடங்களுக்கு இல்லாதிருக்கும் அஸாதாரணமான மரியாதையை அறிவிக்கும் ரிகார்டையும் பார்த்தாலே, உத்தராதிமடம் மூலமடம் என்பது சூரியனின் ஒளிபோல் ஸ்பஷ்டமாய் இருக்கிறது. இப்போதும்கூட ஸ்ரீராகவேந்திரஸ்வாமி மடத்திலேயும் ஸ்ரீவியாஸராஜ மடத்திலேயும் ஸ்வாமியின் எடபலத்தில் இடது பாரிசுவத்திலும் வலது பாரிசுவத்திலும் உட்கார்ந்தும், உத்தராதி மடத்தில் ஸ்வாமிக்கு எதிரில் அபிமுகமாய் உட்கார்ந்தும், பூஜித்துவருவது மேலே சொன்னதற்கு புஷ்டியளிக்கிறது.

குருசரிதையில் 128வது பக்கத்தில் அதை எழுதியவர் எழுதி யிருப்பதாவது: சந்திரபட்டர் என்பவர் ஸ்ரீஸ்வாமிகளிடமிருந்து (ஸ்ரீரகுநந்தன தீர்த்தரிடமிருந்து) ஆக்ஞைபெற்று. அம்மடத்திலி ருந்து கிளம்பி பர மடத்துக்குப் (உத்தராதி மடத்துக்கு) போய், பலசேவையில் அமர்ந்து வெகுகாலம் அப்படியே இருந்தார். அதன் பிறகு, ஆனந்தநாம ஸம்வத்ஸரத்தின் கார்த்திக சுத்த ஏகாதசி யன்று ராத்திரி ஸ்வாமி விக்ரஹங்களை படுக்க வைக்காமல் வைத் திருந்ததால் மூலராமரை எடுத்துக்கொண்டு ஸ்வாமிகள் முகாம் செய்திருந்த பங்காபூர் ஊரிலிருந்து புறப்பட்டு ஸ்ரீரகுநந்தன ஸ்வாமிகள் இருந்த பெனுகொண்டாவுக்கு வந்து, அங்கு ஸ்வாமி களிடம் விக்ரஹத்தை ஒப்புவித்தார். சீதா விக்ரஹத்தைக் கொணரமுடியவில்லை என்று சொன்னார். நித்யாவியோகினியான ரமாதேவியார் ஸ்ரீராமருடைய ஹ்ருதயத்திலேயே இருக்கிறார் என்று சமாதானம் அடைந்தார் என்று இந்த கதை ஓர் அஸத்ய மூட்டை. அநேக ஸச்சிஷ்யர்களின் நடுவில் அநேக தீபங்களின் ஒளியில், அச்சமயத்தில் இருந்த உத்தராதிமடம் ஸ்வாமிகளான ஸ்ரீரகுவர்ய தீர்த்தர், ஸ்ரீமூலராமஸ்வாமி பெட்டியை வைத்துக் கொண்டு, கண் விழித்து, ஜாகரணை செய்யும் அந்நல்ல நாளான ஏகாதசி இரவில் சந்திரபட்டன் ஸ்ரீமூலராமனை திருடினான் என்று சொல்வது நகைப்புக்கு இடமானது. ஸ்ரீமத்வாசாரியாரிடமிருந்து 13வது பரம்பரையான ஸ்ரீரகுவர்ய தீர்த்தர் ஏகாதசி ராத்திரியில் அதிலும் கார்த்திக சுத்த ஏகாதசி, உத்தான ஏகாதசியன்று ஜாக ரணை செய்யாமல் தூங்கி இருந்தார் என்றும், ஸ்வாமி விக்ரஹங் களை படுக்க வைக்காமல் வைத்திருக்க அந்த ஸ்வாமி விக்ரஹங் களுக்கு காவல் புரியாமல், மடத்தின் எல்லா பரிவார ஜனங்களும் தூங்கிக்கொண்டிருந்தார்கள் என்றும், ஸ்வாமிகள் தேவ கிருகத் தில் உள்ளே தாப்பாள் போட்டுக்கொண்டு படுத்திருக்கையில் சந்திரபட்டன் ஸ்வாமியைத் திருடினான் என்றும் சொல்வது மிக மிக அப்ரமாணிகமானதாய் இருக்கிறது. ஒருக்கால் அவன் ஸ்வாமி விக்ரஹத்தைத் திருடிக்கொண்டு போனான் என்று வைத்துக் கொண்டாலும் அந்த காலத்தில் அருணோதயத்திற்கு முன்பே ஸ்வாமிக்கு ஹரிவாணஸேவை மங்களாரத்திகளைச் செய்யும் ஸம் பிரதாயம் ஸ்ரீஉத்தராதிமடத்தில் இருப்பதால், அதன்படி அந்த சமயத்தில் ஸ்ரீமூலராம விக்ரஹம் இல்லாமல் இருப்பதையும் இட பல சேவை பட்டன் மறைந்துவிட்டதையும் கண்டு, பட்டனே திருடினான் என்று நிச்சயித்து, பட்டனைத்தேட எட்டு திக்குகளுக் கும் வாயுவேகத்தை மீறும் குதிரை சவார்களை அனுப்பி, பட்டனைப்

பிடித்துக்கொணர, அந்த ஸ்ரீரகுவர்யதீர்த்த ஸ்வாமிகளுக்கு முடியாமல் இருந்ததா என்ன? ஆதலால் ஸ்ரீமூலராமர் ஸ்ரீராகவேந்திரஸ்வாமி மடத்தில் இருக்கிறார் என்று வார்த்தையை கிளப்பிவிடுவதற்காக ஆஜஹார புனயில்யாத் ஸ்ரீரகுநந்தன ஸ்வாமிகள் விலை கொடுத்து வாங்கினர் என்றும், ஆளை வைத்துத் திருடினர் என்றும் இவ்வாறு அந்நூலாசிரியர் அஸத்யமான பிரஸங்கமாரியை பொழிந்திருந்திருக்கிறார். ஒருக்கால் ஸ்ரீமூலராமரை திருடச்செய்து அந்த ஸ்வாமிகள் வரவழைத்தார் என்று கட்டிவிட்டிருந்தாலும், ராஜாக்களுக்கும், மகாராஜாக்களுக்கும் ஸ்வாமி தரிசனம் செய்வித்து வந்த ஸ்ரீரகுவர்யர், அந்த ப்ரபுக்களின் ஸஹாயத்தால் திருட்டுப்போன ஸ்வாமி விக்ரஹத்தை கைப்பற்றாமல் விட்டிருந்திருப்பாரா என்ன? ஆக அந்நூலை எழுதியவர் ஸ்ரீமூலராமரை தம் மடத்தின் பீடத்தில் ஏற்றிவைக்க கைக்கொண்ட ஆர்வத்தில் மஹனீயரான ஸ்ரீரகுநந்தன தீர்த்தஸ்வாமிகளை, ஸ்ரீராமனிடமிருந்து சீதாதேவியை பிரித்த ஸூராணகாள் என்னும் அஸூரக்கும்பலில் இழுத்து வைத்துவிட்டார். ஸ்ரீகிருஷ்ணரிடம் கதாப்பியாஸம் செய்தால், அந்த அப்பியாஸம் செய்யும் காலத்தில், ஸ்ரீகிருஷ்ணரை எதிர்த்து, கதையை தூக்கவேண்டி வரும் என்றும் அதுவும் தகாதகாரியம் என்றும் எண்ணிய பீமசேனரின் புத்தி படைத்திருக்கக்கூடிய ஸ்ரீரகுநந்தனதீர்த்த ஸ்வாமிகள் மனஸாபி மனதால்கூட, சீதாராம விக்ரஹங்களுக்கு வியோகத்தை சிந்திப்பதும்கூட அவருக்கு அஸஹ்யமாய் பொருக்கமாளாததாய் இருந்திருக்கக்கூடும். அப்படியிருக்க காரியத்திலும் அந்த ஸ்வாமிகள் அந்த ஸீதாராமர்களை பிரிந்துபோகச் செய்தார் என்றும், திருடி வந்த விக்ரஹங்களை பூஜிப்பது அநர்த்தம் என்பதை அறியாத சாமானிய ஆசாமிக்கு சமமானர் என்றும் சொல்வது பெரும் துணிச்சலான பேச்சு. ராமர் விக்ரஹத்தை மட்டில் கொண்டு வந்தவுடன், நித்யாவியோகினியான ரமாதேவியார் ஸ்ரீராமரின் ஹ்ருதயத்தில் இருக்கிறாள் என்று சமாதானம் செய்துகொண்டு ஸ்ரீராமருடைய ஹ்ருதயத்தில் சீதாதேவியைக் காணும் ஸ்ரீரகுநந்தனர் தம்மிடமிருந்து வந்த சாதாரணமான ஸ்ரீராமர் விக்ரஹத்தில், ஸ்ரீமூலசீதாராமர்களைக்கண்டு ஸமாதானமடைந்து சும்மா இருந்துவிடாமல் லக்ஷ்மீநாராயணர்களுக்கு வியோகத்தை உண்டு பண்ணும் திருடர்களின் துஷ்கிருத்யத்தைச் செய்தார் என்று சொல்வது அந்த மஹனீயரின் சரித்திரத்துக்கே களங்கத்தை உண்டுபண்ணியிருக்கிறார் என்று சொல்வதே தகும். ஸ்ரீசீதாராம ப்ரதிமைகளை ஒரே பெட்டியில் படுக்கவைக்கும் உத்திராதிமடத்

தின் ஸம்பிரதாயம் ஸ்ரீசீதாராம ப்ரதிமைகளுக்கு வியோகத்தை உண்டுபண்ணுவது பாபஸாதனம் என்பதை சூசிக்கிறது. ஸ்ரீமூலராமர் விக்ரஹமும் ஸ்ரீமூலசீதா விக்ரஹமும் ஒருங்கே சேர்ந்திருக்கையில் சந்திரபட்டன் ஸ்ரீசீதா விக்ரஹத்தைக் கொணர முடியவில்லை எனச்சொன்னான் என்று எழுதியிருப்பது சரி என்று ஆகமாட்டாது.

மற்றும் ஸ்ரீமூலராமர் எந்த மடத்தில் இருக்கிறார் என்பதை சிறிது விசாரம் செய்வோம். ஸத்யபோத விஜயம் 16வது ஸர்க்கம் 29, 60 சுலோகங்களில்

मध्वीयं सममथ मूलराममुर्वी पुत्र्यादिग्विजय रघूद्वयं निधत्ते ।
पीठाग्र्ये कनकमये स वंसरामं तत्रैवानुपरिसं विट्ठलं प्रसन्नम् ॥

श्री भूमी बुधराजवंदितपदद्वंद्वार विंदद्वयं
वेदव्यासयुतं रघूद्वहमिद श्वेभ्योददानं सुखम् ॥

दर्शं दर्शमुदग्रकीर्तितपसं श्री सत्यबोधं गुरुं
वन्दे वंद्य ममंद सन्मुदममी विंदंति विप्राज्ञति ॥

வித்யாதீச விஜயம் ஸர்க்கம் 10, சுலோகம் 34

तत्रैव वेदनिधि योगिनी मूलराम ।
चन्द्राकृतिं च विनिधाय बुधाननेकान् ॥

आप्तैस्समं सपदिवृद्धसुर स्रवंतीम् ।
तीर्थ्याधने शहरितं यतिराड्प्रतस्थे ॥

ஸத்யாநந்த விஜயம் ஸர்க்கம் 4, சுலோகம் 23

अधिरोप्य समूल राघवं हसितोव्रजमौक्तिकस्रजाय ।
सुमहार्ह किरीटकुंडला हतुला कल्पगणैरपूजयत् ॥

ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகளான ஸ்ரீஸத்யநாத தீர்த்தர் அவர்கள் இயற்றிய அபிநவ சந்திரிகையில் பக்கம் 227

सीतयासहितं मूलराममिक्ष्वाकुपूजितम् ।
आनन्दतीर्थमुनिपं नमामि ज्ञानसिद्धये ॥

176144

குருசரிதையை எழுதியவர் தாம் எழுதிய விஷயங்களுக்கு ஆதாரமாயுள்ள அநேக ஸாதனங்கள் இருப்பதாய் எழுதிவிட்டாரே அல்லாது அவைகளை எடுத்துச் சொல்லவில்லை. தயவுசெய்து அவைகளை ப்ரசித்தம் செய்தால், வாசகர்களுக்கு உண்மையான அம்சங்கள் தெரியவருவதற்கு அனுகூலம் ஏற்படுகிறது. நாம் மேலே காட்டிய ப்ரமாணங்களை ஒப்புக்கொள்ளப்படவேண்டியதே ஆகும். எமது மத்வ சித்தாந்தத்தில் ப்ரமாண்யம் என்பது ஸ்வதாவாய் என்று ஒப்புக்கொண்டிருக்கிறோம். ப்ரமாண்யமுள்ள ப்ரமாணத்திற்கு விரோதத்தாலேயே அப்ராமாண்யத்தைச் சொல்லவேண்டும். இப்பேர்ப்பட்ட பாதகம் ஒன்றும் மேற்கண்ட ப்ரமாணங்களுக்கு இல்லவே இல்லை. தவிரவும் ஸ்ரீமூலராமர் ப்ரதிமையைத் திருடி ஸ்ரீரகுநந்தனர் வரவழைத்துக் கொண்டதாகவாவது அல்லது கிரயம் கொடுத்து வாங்கியதாகவாவது இருக்கும்பக்ஷத்தில், உத்தராதிமடத்தில் நூதனமாய் புதியதொரு ப்ரதிமையை தயார்செய்தார்கள் என்று ஸ்ரீரகுவர்யரின் காலத்திலாவது அல்லது வேறு ஸ்வாமிகளின் காலத்திலாவது ஓர் ப்ரதீதிகூட உண்டாகவில்லை. இந்த விஷயம் உண்மையாய் இருந்தால், ஊர்வாயை மூட ஒருவராலும் முடியாது. தவிரவும் உத்தராதிமடம் மூல மடமாய் இல்லாதிருந்தால், இத்தனை சிஷ்யகோடிகள் பெருத்திருப்பதற்கு காரணமென்ன? ஸ்ரீராகவேந்திரஸ்வாமி மடம் சாகா மடமாய் இருப்பதால்தான், சில ஜனங்கள் ஏதோ ஒரு காரணத்தால் அந்த மடத்துக்கு சிஷ்யர்களானதால் அந்த மடத்துக்கு சிஷ்ய ஸம்பத்து சொற்பமானது சகஜமாய் இருக்கிறது. தவிரவும் உத்தராதி மடம் ஸ்வாமிகளான ஸ்ரீஸத்யப்ரமோத தீர்த்த ஸ்ரீபாதாள், மலகேடா, ராஜகோபாலபுரம் முதலான க்ஷேத்திரங்களில் அகண்டமாய் ஐந்துமணி நேரம் சிறந்த பாண்டித்யம் படைத்தவர்களுக்கும்கூட முடியாதிருக்கும், உத்தம ரீதிப்படிக்குள்ள நியாய ஸுதா வாக்யங்களின் அர்த்தானுவாதம் செய்துவரும்பொழுது, பண்டித சமூகங்களின் கண்களிலிருந்து ஆனந்தக்கண்ணீர் தாரைதாரையாய் பெருகி வந்ததைப் பார்க்குமளவில், எந்த பாமரனும்கூட, ஸ்ரீமத்வாசாரியாரின் மூலமடமான உத்தராதி மடத்திலேதான் ஸ்ரீசந்திரிகாசாரியாளான ஸ்ரீவியாஸராஜஸ்வாமிகள், ஸ்ரீபரிமளாசாரியாளான ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகள் இவர்கள் முக்யமாய் ஸன்னிஹிதர்களாய் இருக்கிறார்கள் என வாய்விட்டுச் சொல்லாமல் இருக்க முடியாது.

न ताद्दशि प्रीतिरीडयस्य विष्णोः
गुणोत्कर्ष ज्ञातरि याद्दशीरिया श्रुजिः स्यात् ॥

चण्डालोपि न चण्डालः गुरुद्रोहि न दोषभाक् ।
मध्वशास्त्रस्य संत्यागात् सतु चण्डाल उच्यते ॥

(मध्वामृत महार्णव)

अप्रमेयपति शास्त्रमद्भुतं. यस्त्यजेत्युपनतं सुदुर्लभम् ।
तस्यतुल्यमचिरेषदुर्जनो नाथवास्य द्दशोऽस्तिनीचधी ।

(मध्व विजय)

स्वाध्यायान्नप्रमदः तद्धितपः तद्धितपः ।

(उपनिषत्)

என்றிவ்வாறு விஷ்ணுவின் குணங்களின் மேன்மைகளைச் சொல்லும் சாஸ்திரங்களை ப்ரவசனம் செய்யாதிருந்தால், அநர்த்தமும் ப்ரவசனம் செய்வதால் மோக்ஷத்திற்கு முக்ய ஸாதனமான ஹரி ப்ரீதியும் ஏற்படுவதாய் சொல்லப்பட்டிருப்பதைக்கொண்டு, ஹரி குணப்ரதிபாதகமான அவர்களின் க்ரந்தங்கள்தான், ஸ்ரீவியாஸராஜஸ்வாமிகள் ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகள் இவர்களுடைய ப்ருந்தாவனங்களாகின்றன. அவைகளின் ஆராதனை (அதாவது அவர்களின் கிரந்தங்களின் ப்ரவசனம்) நிரந்தரமாய் எந்த உத்தராதிமடத்தில் நடைபெற்றுவருகிறதோ, அங்கு அவர்கள் முக்யமாய் ஸன்னிஹிதர்களாய் இருக்கின்றனர் என்று சொல்வது இயற்கையே ஆகிறது. இதர மடம் ஸ்வாமிகளான ஸ்ரீசந்திரிகாசாரியாளும் ஸ்ரீபரிமளாசாரியாளும்கூட ஸன்னிஹிதர்களாய் இருப்பதால், எந்த உத்தராதிமடத்தில் த்வைத விஜய துந்துபி இன்னமும்கூட முழங்கப்பட்டுவருகிறதோ, அந்த உத்தராதிமடத்திற்கு தாழ்மையை சிந்தனை செய்வதாகிய அந்யதோபாஸனையால்

यत्किंचिदन्यथा सन्तमन्यथाध्यायतमं जसादोषकरं भवेत् ॥

என்று ஸ்ரீமத்வாசாரியார் அனுவ்யாக்யானத்தில் அருளியபடி பாபத்திற்குள்ளாயிருப்பது எச்சரிக்கப்படுகிறது.

ஸ்ரீமூலராமர் உத்தராதிமடத்தில் இருக்கிறார் என்பதற்கு எத்தனையோ தாஸர் பதங்கள் ஆதாரமாய் இருந்துவருகின்றன

ஸ்ரீவிஜயதாஸரின் சிஷ்யரான ஹொன்னுளி வெங்கடவிட்டலர் சொன்ன "ஸத்யபோதராய—பாலிஸோ ப்ருத்ய ஜனப்ரிய நித்ய தலி துதிபே மனதொளு சித்தஜபிதனு உத்தம மதிகொடு" என்னும் பல்லவிகொண்ட பதம், சிப்பகிரியில் மோஹனதாஸர் கையால் எழுதிய புஸ்தகத்தில் 22வது பக்கத்தில் 321வது பதமாய் காணப்படுகிறது. அதில் "மூலராம சீதா பீலகிராம வேதவ்யாஸ ஸாலக்ராம திக்விஜயராமன னு காலகால அனுகூல பூஜிஸுவே" என்று ஸ்பஷ்டமாய் சொல்லப்பட்டிருக்கிறது. மற்றும் மோஹனவிட்டலர் ஸ்ரீஸத்யவீரரின் காலத்தில் பாடிய பதம் 62வது பக்கத்தில் கண்டிருப்பது "யேனுபேளலி இவரகீர்த்தி, ஸ்ரீநாதராம பந்தனு பவ்யமூருதி" என்னும் பல்லவிகொண்ட இந்த பதத்தில் "அந்து நரஹரியதியு தந்தத்தன்ன கர்ணதிந்த கேளித்தல்லதே கண்டில்லா—இந்தெந்து இந்தெந்து குருஸத்யஸந்த ஸுதரிகொலிது பந்தராமன கண்ணிந்த நாகண்டே" என்று ஸ்பஷ்டமாய் பாடியுள்ளார். மற்றும் இந்த விஷயத்தில் அதிகமாய் ஆதாரங்கள் வேண்டுமானுல் ஸ்ரீவடவி பீமாசாரியார் (காவ்யரத்ன) ராகவேந்திர குருகதாம்ருத கும்புவில் ஸ்பஷ்டமாக அவைகளைக் காணலாம்.

எங்கும் வைதிக தர்மங்களுக்கு மஹத்தான ஆபத்து சம்பவத்திருக்கும் இந்த காலத்தில் ஸநாதன தர்மத்தை நிலைநிறுத்த த்ரிகரண சுத்தியாய் வைதிக தர்மப் பற்றுள்ளவர்கள் யாவரும் ஏகோபித்து ப்ரயத்தினம் செய்யவேண்டியதைவிட்டு குருசரிதையின் ஆசிரியர் இவ்வாறு துவேஷத்தை உண்டாக்கக்கூடிய இந்த குருசரிதையாகிய நூலை எழுதி, ஜனங்களின் மனதில் கலக்கத்தை ஏற்படுத்தி, ப்ரசாரம் செய்திருப்பது மிகவும் வருந்தத்தக்கதாய் இருக்கிறது. ஆதலால் நிரமத்ஸரானான பொதுஜனங்கள் நாம் மேலே விவரித்திருக்கும் உண்மையான ஸங்கதிகளை தெரிந்துகொண்டு மனக்கலக்கத்தை அகற்றி களித்திருக்கவேண்டுமென்பது இந்த விமரிசையின் உத்தேசம்.

அனுபந்தம்.

குருசரிதையில் ஸ்ரீவியாஸராஜ மடத்து ஸ்ரீபாதாள் அவர்களின் முன்னுரை ஒன்றும் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. அந்த முன்னுரை குருசரிதையை எழுதியவரால் எப்படி கைப்பற்றப்பட்டது என்பது அடியிற்கண்டிருக்கும் அந்த ஸ்ரீபாதாளின் கடிதத்தாலேயே தெரியவரும். அந்த ஸ்ரீபாதாளுக்கு அன்னார் எழுதியபடியே குருசரிதைக்கு முன்னுரையை கொடுத்த ஸ்ரீராகவேந்திர ஸ்வாமி மடத்து ஸ்ரீபாதாளுக்கும் அன்னார் எழுதியும், அந்த ஸ்ரீபாதாளிடமிருந்து இதுவரை எந்த கடிதமும் கிடைக்கவில்லை.

ஸ்ரீவியாஸராஜ மடம் ஸ்வாமிகளின் கடிதம்.

விகிருதிநாம ஸம்வத்ஸரம் வைசாகசுத்த ப்ரதமை யன்று ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யோத்யா அநேக பிருதாங்கிதர்களாயுள்ள ஸ்ரீவியாஸராஜரவா களின் வித்யாஸிம்ஹாஸனாதிபதிகளான ஸ்ரீமத்வித்யா ப் ஸன்ன தீர்த்த ஸ்வாமிகள் எமக்கு ப்ரியரான D. V. சுப்பா சாரியாருக்கு அன்னாரின் ச்ரேயஸ் இன்னமும் விருத்தி ஏற்பட செய்யும் நாராயண ஸ்மரணை பூர்வமாய் நிருப எழுதியனுப்பியிருக்கிறார்.

ஸ்ரீவித்யா பவர் ப்ரெஸ், கும்பகோணம்.

Free distribution

Copies available at :

KESAVACHAR KATTI, B. A.
Chief Officer, Boghalkotta
BOMBAY STATE.